உருக்கினுலான நவீன
வீட்டுத் தளபாடங்களிற்கு
JAYAN
Furniture Palace
சாமியன் அரசடி
கரவெட்டி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality
Steel Cupboard, Bed
DINING TABLE
OFFICE TABLE
Cushion Settee And
Other Home Needs
CONTACT
JAYAN
Engineering Works
Samyan Arasadi
Karaveddi

முரசு 1 ஒலி 176 ஞாயிற்றுக்கிழமை 24 - 05 - 1987 (வைகாசி 10) றம்ழான் 25 விலை ரூபா 2 - 50

★ இந்திய கடற்படையும், விமானப்படையும் உஷார்படுத்தப்பட்டுள்ளன!

# அமெரிக்க ஆயுதக் கப்பல் கொழும்பு நோக்கி வருகிறது

## இலங்கைக் கடற்படை அத்துமீறிச்சுட்டு தமிழக மீனவர் இருவர் கடலில் மரணம்

(புதுடில்லி)

அமெரிக்க ஆயுதக் கப்பலொன்று கொழும்பு நோக்கி வருவதாகக் கிடைத்த தகவலையடுத்து இந்தியா தனது கடற்படையையும், ஆகாயப்படையையும் உஷார்நிலைப் படுத்தியுள்ளது. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் தேவையான நவீன ஆயுதங்களுடன் இக்கப்பல் வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதுடில்லியிலுள்ள சோஷலிஸ நாட்டுத் தூதரகங்களின் அதிகாரிகள் மத்தியில் நேற்று உரையாற்றும்போது இதனைத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. கே. பி. எஸ் மேனன், இந்து சமுத்திரப் பிராந்தியத்தைப் போர்ப் பிராந்தியமாகமாற்ற அமெரிக்கா எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தியா அனுமதி அளிக்க முடியாது என்றும் சொன்னர்.

இதற்கிடையில் நீண்டகால இடைவெளியின் பின்னர் தமி

—12 ஆம் பக்கம் பார்க்க

## பிரேமதாஸாவின் பேச்சுக்கு தூதரக செயலர் கண்டனம்

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளைப் பாதிக்கக்கூடிய வகையில் இலங்கை அரசும் அதன் உயர் தலைவர்களும் நடந்துகொள்வது தொடர்பாக இந்தியா, இலங்கையிடம் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

தமிழ்ப் போராளிகளுக்கு தமிழக அரசு நிதி உதவி வழங்கியுள்ளது தொடர்பாக கண்டனத்தைத் தெரிவிப்பதற்காக இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. பூரி, வெளிவிவகார அமைச்சுக்கு அமைச்சர் ஹமீத்தால் அழைக்கப்பட்டிருந்தார். இச் சந்திப்பின் போதே திரு. பூரி

—12 ஆம் பக்கம் பார்க்க

### தமிழக அரசின் நிதியுதவியால்

## இலங்கை-இந்திய உறவில் விரிசல் ஏற்படும் அபாயம்

இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு. பேர்னுட் திலகரத்தின இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியை சந்தித்து சுமார் நாற்பது நிமி

—12 ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டிஷ் கூலிப்படைகள் நடத்திய படுகொலைகள்!

கே. எம். எஸ். நிறுவனத்தால் பயிற்றுவிக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் படுகொலைகள் பற்றிய தகவல்களை மேற்குநாட்டு ராஜதந்திரிகள் சேகரித்திருப்பதாக "வாஷிங்டன் டைம்ஸ்" தெரிவித்துள்ளது.

கே. எம். எஸ். படையினர் அதிரடிப்படையினரை மரணப்படையாக மாற்றி வருவதாகவும் இவர்கள் அப்பாவித் தமிழ் மக்களை பீதியடையச்

—12 ஆம் பக்கம் பார்க்க

## பொம்பர்களின் விளையாட்டு

நேற்றுக் காலை 6-15 மணிபோல் யாழ்நகருக்குள் நுழைந்த இரு பொம்பர் விமானங்

—12 ஆம் பக்கம் பார்க்க




நேரடி மோதலில் மரணமான தளபதி ராதாவின் பூதவுடல் நேற்று முற்பகல் சுதந்திரப் பறவைகள் அணிவகுத்துச் செல்ல, வீரவேங்கைகள் புடைசூழ கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படுகையில் இப்படம் எடுக்கப்பட்டது.

## தளபதிராதாவின் லட்சியத்தை ஈடேற்றுவதே எங்கள் கடமை

இராணுவத்தினருடனுன மோதலில் வீரமரணமடைந்த தளபதி ராதாவின் பூதவுடல் பூரண ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் நேற்று தகனஞ் செய்யப்பட்டது. தளபதி ராதாவின் தந்தை திரு. கனகசபாபதி அவரது சிதைக்கு தீ வைக்க நண்பகல் பதினெரு மணியளவில் தளபதியின் உடல் தீயுடன் சங்கம

... 12 ஆம் பக்கம் பார்க்க

கலாச்சாரியார் — சுந்தர்



# நீங்கள் சாவுக்குப் பின்னும் சரித்திரம் படைப்பவர்கள்; உங்களை புதைப்பதில்லை....! விதைக்கிறோம்....!

பிறப்பு
22-12-1956



வீரமரணம்
20-5-1987

# வீர வேங்கை தளபதி ராதாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

- குலசி றேட்ஸ், கல்வியங்காடு.
- லக்கி வாச் வேக்ஸ், கல்வியங்காடு.
- ஐலண்ட் மார்க்கெட்டிங் என்ரர்பிறைசஸ், கல்வியங்காடு.
- சசி கோப்பி & கூல் பார், கல்வியங்காடு.
- சிற்றிசன் எலக்ரோனிக்ஸ், கல்வியங்காடு.
- கந்தசாமி அன் சன்ஸ், கல்வியங்காடு.
- வூட்லண்ஸ் ஹோட்டல், கல்வியங்காடு.
- எஸ். என். தெய்வேந்திரம், ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு.
- நாகேந்திரா ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு.
- விவேகானந்தா ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு.
- ரவி கிறீம் ஹவுஸ், கல்வியங்காடு
- கேதீஸ் ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு.

- கல்வியங்காடு வர்த்தகர்கள் -

05101

வாரமுரசொலி

# லலித்தின் சூதாட்டத்தில் துரும்பு யாரிடம் சென்றது?

யாழ்ப்பாணம் வைத்தியசாலையை ஒரு 'அதிர்ச்சி' மருந்தாகப் பயன்படுத்தி யாழ். நகரை மீண்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. ஆஸ்பத்திரியை மூடுவதாக அறிவித்தல் விடுப்பதன் மூலம் இதனைச் செயற்படுத்த அரசாங்கம் முயன்றபோதிலும் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் இதற்கு ஏற்பட்ட எதிர்ப்புக்களாலும் விடுதலைப் புலிகள் விதித்த சிலநிபந்தனைகளாலும் அரசின் இத் திட்டம் தோல்வியில் முடிவடைந்தது.

சாதாரணமான ஒரு இடமாற்ற உத்தரவுகூட ஒரு மாத முன்னறிவிப்புடன்தான் வழங்கப்படுவது வழமை. ஆனால் சுமார் ஆயிரம் படுக்கை வசதிகளைக்கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலையை இடமாற்றும் உத்தரவு ஐந்து நாள் முன்னறிவிப்புடன் மட்டுமே வழங்கப்பட்டது.

எட்டாம் திகதியுடன் (8.5.87) வைத்தியசாலையை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்படவேண்டும் என்ற 28.4.87ம் திகதியிடப்பட்ட கடிதம் 3.5.87 ம் திகதியே வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு கிடைத்தது. போதனா வைத்தியசாலைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் தயா சமரசேகராவினால் அனுப்பப்பட்ட இக் கடிதம் கொழும்பிலிருந்து விமானமூலம் பலாலிக்கு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து 'ஹெலி' மூலம் கோட்டைக்குக் கொண்டுவரப்பட்டு பொலிஸ் ஊழியர்கள் மூலம் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாறு ஒரு கடிதத்தைக் கையளிப்பதற்கு ஆறு நாட்களல்ல ஆறு மணித்தியாலங்களே போதும். 27. 4. 87 ம் திகதியிடப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியே

## யாழ் ஆஸ்பத்திரி விவகாரம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

இதனை மூடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என இக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும், 27ம் திகதிய கடிதம் அதுவரையில் கிடைக்காததும் 28 ம் திகதிய கடிதம் வேண்டுமென்றேகாலந் தாழ்த்தி அனுப்பப்பட்டதும் இதன் பின்னணியில் வேறுதிட்டங்கள் இருக்கவேண்டுமென்ற சந்தேகத்தைப் பலருக்கும் ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

போராளிகளுடன் ஏற்படும் மோதல்களின் போது வைத்தியசாலை தாக்குதலுக்குள்ளாவதால் நோயாளர்களையும் ஊழியர்களையும் காப்பாற்றுவதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது. அத்துடன் வைத்தியசாலைக்கும் கோட்டை முகாமுக்கும் இடைப்பட்ட பகுதியை சமாதானப் பிராந்தியமாக்குவதற்கு போராளிகள் ஒப்புக் கொள்ளாததும் இந்நடவடிக்கைக்குக் காரணம் என அரசு தெரிவித்தது.

அரசாங்கத்தின் இவ் அறிவித்தலின் மூலம் வைத்தியசாலையை மூடுவதற்கான உத்தரவின் மூலம் இரண்டு விதமான நன்மைகளை அரசாங்கம் எதிர்பார்த்ததாக நம்பப்படுகிறது.

முதலாவதாக, வைத்தியசாலை மூடப்படும் பட்சத்தில் முப்படைகளும் இணைந்து நகரில் முகாந்திரமற்ற தாக்குதல்களை மேற் கொண்டு யாழ். நகரை மீண்டும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது. இதன் மூலம் வைத்தியசாலையின் சுகாதார சேவைகளையும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர அரசு திட்டமிட்டிருந்தது. இதற்காகவே வைத்தியசாலையிலுள்ள பொருட்களை முழுமையாக இடம் மாற்ற முடியாத விதமாக குறுகிய கால முன்னறிவிப்பு வழங்கப்பட்டது.

**அர்ஜுனா**

இரண்டாவதாக வைத்தியசாலையை மூடுவதற்குப் பெருமளவு எதிர்ப்புக்கள் ஏற்படும் பட்சத்தில், அதனைப் பயன்படுத்தி 'சமாதானப் பிராந்தியம்' ஒன்றை ஏற்படுத்துவது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வைத்தியசாலையை மூடும் திட்டத்திற்கு பெருமளவு எதிர்ப்புக்கள் ஏற்பட்டதையடுத்து கொழும்பு சென்ற யாழ். குழுவினரிடம் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இதனையே பிரஸ்தாபித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இக் குழுவினர் எட்டாந் திகதி பிற்பகல் அமைச்சர் அத்துலத்முதலியைச் சந்தித்து பேச்சவார்த்தை நடாத்தினுர்கள். வைத்தியசாலையை மூடவோ இடம் மாற்றவோ முடியாததற்கான காரணங்களை யாழ். குழுவினர் அமைச்சர் லலித்திடம் அப்போது எடுத்துக் கூறினுர்கள்.

இதைத் தொடர்ந்து "அவ்வாருயின் வைத்தியசாலையின் பாதுகாப்பை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்?" என அமைச்சர் லலித் வினவினுர். அரசாங்க வைத்தியர் சங்க பிரதிநிதிகள் அதற்கு, வைத்தியசாலையைச் சுற்றியுள்ள பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென மூன்று மாதங்களுக்கு முன்னர் அமைச்சரிடமும் ஜனதிபதியிடமும் விடுத்த கோரிக்கையை நினைவுபடுத்தினுர்கள்.

இச் சமாதான பிரதேச பிரகடனத்தின்படி கோட்டை ராணுவபமீது எவ்விதமான தாக்குதலோ அல்லது அங்கிருந்து எவ்விதமான தாக்குதலோ மேற்கொள்ளக்கூடாது என்பதே இதன் முக்கிய அம்சமாகும். இதன்படி யாழ்நகரின் மத்தியில் பொதுமக்கள் அதிகளவில் கூடும் பல பகுதிகளை உள்ளடக்கிய பாரிய பிரதேசம் சமாதான வலயமாக மாறும்.

இத்திட்டத்தை அரசாங்கம் அப்பொழுதுஏற்றுக் கொண்டதெனவும் போராளிகளின் சம்மதத்தை இதற்காகப் பெற வேண்டுமெனவும் அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இவ்வேளையில் இத்திட்டத்தைக் கலந்துரையாடி நடைமுறைப்படுத்த போராளிகள் விருப்பந் தெரிவித்துள்ளனர் என்று யாழ். குழுவினர் அமைச்சரிடம் தெரிவித்தனர். அதனை ஏற்றுக் கொண்ட அமைச்சர் இராணுவ அதிகாரி கப்டன் ஜயந்த கொத்தலாவலையை இது தொடர்பான கலந்துரையாடலுக்கு உடன் அனுப்புவதாகவும் இதற்குத் தேவையான தொலைதொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஒன்பதாம் திகதி சனிக்கிழமை யாழ். திரும்பிய வைத்தியசாலைக் குழுவினர் அன்று இரவு நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், "யாழ். வைத்தியசாலையை தற்காலிகமாக மூடி சேவைகளையும் உபகரணங்களையும் மாற்றுவசதிகள் செய்யும்படியான கட்டளையை ரத்துச் செய்யக்கோரி கொழும்பு சென்ற தூதுக்குழு தமது பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பியது." எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் பதினெராம் திகதி திங்கட்கிழமை நடைபெறுமெனவும் அவர்கள் அறிவித்தனர்.

எனினும் வைத்தியசாலைக்கும் கோட்டை முகாமிற்கும் இடைப்பட்ட ஒருபகுதியை சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தி அதற்கான வரை படம் (Map) எதுவும் தயாரிக்க முடியாத நிலையே இருந்தது. யாழ்ப்பாணத்தின் வேறோர் பகுதியிலிருந்து முகாம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டாலும் வைத்தியசாலைப் பகுதியிலிருந்துதான் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறி வைத்தியசாலை தாக்கப்படலாம். அதே போல போராளிகளின் அரண்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட தாச்குதல் காற்றினுல் திசைமாறி வைத்தியசாலையில் விழுந்ததென ராணுவம் கூறலாம்.

இதனுல் சமாதான வலயம் என்று குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டும் வரையறுக்காமல் யாழ். மாநகரசபை பகுதி முழுவதையுமே சமாதான வலயமாக பிரகடனப் படுத்த வேண்டுமென அமைச்சர் லலித் தெரிவித்திருந்தார்.

ஆனுல் உண்மையில் இப்பகுதியில் ராணுவத்தின் நடமாட்டத்தை அதிகரிக்கவும் முகாம்களை விரிவுபடுத்துவதற்காகவுமே அமைச்சர் அத்துலத்முதலி இவ்வாறுன ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். சமாதான வலயத்தில் தாக்குதல்கள் நடாத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். "புல்லு வெட்டுவதற்காக" எனக் கூறிக் கொண்டு ராணுவத்தினர் வைத்தியசாலைக்குள் நுழைந்தால்கூட போராளிகள் அவர்கள்மேல் தாக்குதலை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அப்பகுதி தாக்குதல் நடாத்தக் கூடாத பிரதேசமாகும்.

எனவே இத் தாக்குதலற்ற சமாதான வலயத்தை சாதக

(11ஆம் பக்கம் பார்க்க)

புறநானூற்றுக் காட்சிகள்-5

## காளைக்குக் கடன் களிறு எறிந்து படுத்தல்

எனது தலையாய கடன் (என்மகனைப்) பெற்று வளர்த்துக் காத்தலாகும்.

(படைக்கலப் பயிற்சி அளித்துச்) சிறந்த வீரனுய் ஆக்குதல் (அவன்) தந்தைக்குக் கடனுகும்.

வேற்படையைத் திருத்தமாகச் செய்தளித்தல் கொல்லனுக்குக் கடனுகும்.

நல்ல ஒழுக்க நெறியினை வழங்குதல் அரசனின் கடனுகும்.

தனது ஒளி பொருந்திய வாட்படை கொண்டு அரியதாகிய போரினைக் கெடுத்து, அங்கு ஆண் யானையைக் கொன்று, திரும்புதல் இடபம் போன்ற என் மகனது கடனுகும்.

ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே
சான்றே ணுக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(புறநானூறு 312)

இப்பாடலைப் பாடியவர் பொன்முடியார் என்ற பெண் புலவர்.

புறந்தருதல் - பேணிக்காத்தல், சான்ருேன் - படைக்கலப்பயிற்சியிற் சிறந்தஅறிஞன், சமம்-போர், முருக்கி-கெடுத்து, களிறு-ஆண்யானை

திரிபுராந்தகன்

## பெரும் ஆளோ?

("சீர்சிறக்கு மேனி" என்ற திருப்புகழ்ச் சந்தம்)

காணி நெற் பயிர்கள் சுரீர் சுரீர் என
வீடு பற்றும் நெருப்பு குபீர் குபீர் என
காவ லுக்குள் அரண்கள் திடீர் திடீர் என எரிகாலம்!

காடுபுக்கு ஜனங்கள் உளார் உளார் பசி
யோடு மக்கள் கலங்கு கிருர் உளார் பிணி
யாகி உக்கி வதங்கி இதோ இதோ உயிர் விடுகின்றுர்!

பாடுபட்டு முயன்று பலாபலன்களை
யேயெடுக்க வயல்கள் புகார்; புகும் பொழு(து)
ஆமிசுற்றி வளைந்து டுமீல் டுமீல் எனும் அநியாய-

பாத கத்தை முனைந்து செயாய், செயாய்! என
பார னைத்தும் எழுந்து தகா(து) அடாதிது
தீதெ னச்சொல் விளங்க கிலாய் அடா, அட முழுமோடா!

ராணு வத்தை, கலங்கள் கொளார் கொளாபல
ஆயு தத்தை, பறந்து செலா செலாவரும்
ஊர்தியைச் சிறந்த மகா மகாபலம் எனஏவி

வான கத்தில் இருந்து மடார் மடார் என
நீ நினைத்த கணத்தில் ஷெலாய், ஷெலாய்பொழி
போது மக்கள் பயந்து ஐயோ ஐயோ அழலாமோ?

ஆண வத்தில் விளைந்த பொலா பொலா உளம்
ஏவி தைத்த நெருஞ்சி முளால் முளால் இனம்
ஈன முற்ற விதங்கள் எலாம் எலாம் உல கறியாதோ!

ஆக மத்தை உணர்ந்த மகா மகாகுரு
மார் வகுத்த கொள்கை விடாய், விடாதெமை
ஆளு தற்கு முனைந்த ஜெ. ஆர் நீ யார்? ஒரு பெருமாளோ?

— சோ. ப

# உத்தமனார் ஊன்றுகோல் ல. அ. முதலியார்!

**(அதியுத்தமர் ஜே. ஆர். ஜெ. அவர்களின் பாதுகாப்பமைச்சர், 'புவாத்' துடைக்குரிசில், ல. அ. முதலியாரின் வீரத்திறன்களை வியந்து பேய்ச்சாத்தன் பாடிய இயன்மொழி வாழ்த்து.)**

உத்தம னாரின் ஊன்றுகோ லாகிய
முதலி யாரே! முதலி யாரே
சித்தத் தெளிவும் சிறந்தபண் பாடும்
ஒக்ஸ்ஃபோட் பல்கலைக் கழகத் துண்டெனத்
தக்கவா றெண்ணித் தனயனாம் உன்னைப்
பெற்றோர் அங்குப் பேணி அனுப்பினர்.
உற்றுநீ அவற்றைப் பெற்றனை போலச்
சில்லாண் டதனில் திரும்பியுன் தாயகம்
கல்லா மாந்தர் கணிப்பையும் கற்றவர்
அஞ்சுறும் வண்ணம் அதிசயிப் பினையும்
பெற்று மேன்மையிற் பிறங்கினை. உன்றனை
உற்றிடும் அகவாழ் வினிலும் புறமாம்
வாழ்விலும் பெரும்வர லாறு சமைத்தனை.
காழ்ப்புறு கொலைக்கலை கைவந் திடாதவர்
தாழ்ந்திட நீயோ தலைமைபெற் றுயர்ந்தாய்.
உத்தம னாரின் உத்தமப் பணிகளில்
பத்திகொண் டாற்போற் பலகாற் காட்டினை.
அதனால் மகிழ்ந்த அதியுத் தமனார்
சதமென உனைத் தன்னணுக் கத்துக்
கொண்டனர் அமைச்சிற் குறிப்பிடத் தக்கதாம்
திண்டிறற் பொறுப்பினைச் சேர்ந்தது. நீயோ
அகிளான் போல அரித்தரித் துயர்ந்தனை.
நெகிழாத் தன்மையும் நினைத்ததை முடித்திட
வகையெது வெனினும் அழுங்கெனப் பற்றிடும்
உறுதியும் கொலைக்கலை உற்றிடு சிந்தையும்
நிறைவுறப் பெற்றனை யாதலின் நீடிய
பாதுகாப் பமைச்சராய்ப் பண்ணினர் உத்தமர்.
அன்றுதொட் டுன்னதி காரமும் பலமும்
குன்றென உயர்ந்தது கொலைபயில் களமாய்
ஆனதே எங்கள் அருந்தமிழ் ஈழம்.
பால்மணம் மாறாப் பாலரும் கிழவரும்
அழகுப் பெண்டிரும் அரும்பெறல் இளைஞரும்
பழகுமுன் படையினாற் பாடைகள் ஏறினர்.
பூசா முகாமிலும் வெலிக்கடைச் சிறையிலும்
ஈசா! எம்மவர்க் கெத்துணைத் தொல்லைகள்!
சித்திர வதைக்கு ஸ்ரீலங் காப்படை
இத்தரை தனிலே ஈடிணை அற்றதென் (று)
உலகிற் குணர்த்திய உயர்பே ராளா!
நம்பிய தலைவன் நடுவழி நிற்க
எம்பியே வளர்ந்தே எவரும் கலங்கிட
நின்றிடு மலையென நிமிர்ந்தனை. இன்றுநீ
கொன்றிடல் ஒரே குறியெனக் கொண்டனை.
வாட்டியே வதைத்து வானிலும் தரையிலும்
ஆட்டம் காட்டிடும் ஆடல்வல லாய்நீ.
சாட்டுகள் சொல்லும் சமர்த்தினுக் குனக்குப்
போட்டியாய் உலகிற் பிறந்தவர் எவரோ?
பூனையும் பூனையும் அப்பம் பங்கிடப்
போனவப் போழ்தினில் புல்லிய குரங்கது
தான்முழுப் பங்கையும் தனக்கெனக் கொளல்போல்
நாட்டுப் போட்டியில் நற்காப் புக்கென
வேட்டுள நிதியெலாம் வெற்றுவேட் டுக்காய்க்
கொண்டிந் நாட்டினைப் பஞ்சக் காடதாய்
மண்டிட வைத்திடும் மதிவல் லோயே!
''பேச்சுவார்த் தைக்கு வந்திடா விடிலோ
மூச்சுப் போக்குவன் மூடரே வாரும்''
என்று பேசிப் பேசிய தமிழராக்
கொன்று குவித்திடல் குறியாய்க் கொண்டனை
அந்நியக் கூலிப் படைகளைக் குவித்தும்
இந்நாட் டுன்னின இளைஞரை மயக்கிப்
படையெனப் பெயரைப் படைத்தவர் கைகளில்
திடம்பெற ஆயுதம் தேடியும் கொடுக்குவை.
வஞ்சினம் புகன்றிடும் வாய்ச்சொல் வீர!
''புலிகளை ஒழித்துப் புறங்கொடுத் தோட்டித்
தலைமையைக் காத்திடும் தருணம் வரும்வரை
பதவியைத் துறவேன், பாரும் இருந்தே''ன.
நிதநிதம் கூறியே நிலைக்கவும் வல்லாய்.
இப்படிச் சபதம் எத்தனை? எத்தனை?
செப்படி வித்தை செய்துமே உலகினை
எப்படி யாயினும் ஏமாற் றிடவே
முனைந்திடும் முயற்சியில் முன்னிற் பவனே!
நினைந்திட முடியாக் கற்பனைப் பொய்களைப்
புனைந்துமே உரைத்திடு 'புவத்'தின் தாபக!
காற்றினில் ஷெல்கள் திசைமா றிடுதலும்
மாற்றலர் போல ஆற்றலர் ஆகிப்
புலிப்படை யினரே தம்மவர் மீது
நலிவுறத் தாக்கியே நாசமாக் கிடலும்
வைத்திய சாலையில் வருந்துநோ யாளரைப்
பைத்தியம் கொண்ட பாங்கிலாப் புலிகள்.
தாக்கியே கொல்லலும் தாழாச் சினத்தொடு
சீமேந் துத்தொழிற் சாலையூ ழியரைத்
தாமே கொன்றபின் பயங்கர வாதிகள்
ஆமே இவரென 'ஆமி'காட் டுதலும்
இவ்வணம் பற்பல இயைபிலாப் பொய்களைச்
செவியினில் உரைக்கச் செய்திடும் திறமையில்
ஐயனே! இணையுனக் காரின் றுள்ளனர்?
முதுகில் மண்படு போதினும் மீசையில்
மண்படா தெழவல மாண்பார் குரிசில்!
எவ்வெவர் உண்மையை எடுத்துரைத் தாலும்
செவியிற் கொளாத செம்மல்நீ யன்றோ?
''ஆதியோ நாங்கள்? அநாதியாய் இம்மண்
வாழ்குவோம் எங்கள் மானம் இழந்து
தாழ்ந்திட மாட்டோம் சத்தியம் இது'' எனப்
புறப்பட் டுள்ள மறக்குல மைந்தரை
இறக்கச் செய்வதால் இலட்சிய போமென
நினைத்திடும் சிந்தனைத் திறனுடை யாளா!
வடக்கில் தலையிடி மாளா திருக்கையில்
திடுக்கெனத் தெற்கில் திருகு வலியதும்
முளைத்திடக் கண்டும் முனைப்பழி யாதினும்
இருக்கும் உறுதி உனக்குள தெனினும்
'செருக்கும் சினமும் சேர்ந்தார்க் கொல்லியாம்'
உண்மையை உனக்கின் றுணர்த்திடல் எங்கடன்
அணையும் விளக்கின் அந்தத் தினில் எழுந்(து)
இணையும் சுடரே இறுதிச் சுடராம்
அதுவே அழியாச் சுடரென மயங்கி
மேலும் மேலும் முனைந்திடில்
காலம் பதில்சொலும் கேட்டிட இருப்பையே.

# சிறுவர்க்கான நாடகங்கள்

கலாநிதி சி. மௌனகுரு

இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

எம் மத்தியிலே பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் போட்டிகளிலும், பாடசாலை விழாக்களிலும் பாடசாலை மாணவர்களைக் கொண்டு சிறுவர் நாடகங்கள் மேடையிடப்படுகின்றன. இவை யாவும் பெரியவர்களே தமக்காகப் பிள்ளைகளைக் கொண்டு நடிப்பிக்கும் நாடகங்களாக அமைகின்றனவேயன்றிச் சிறுவர்களின் மன வளர்ச்சி, திறன்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டனவாகவோ, அவற்றை வளர்ப்பனவாகவோ இல்லை. அத்துடன் சிறுவர்களை உற்சாகத்துடன் ஈடுபட வைப்பனவாகவோ, அவர்களின் திறன்களைவெளிப்படுத்தி அவர்களைப் புதிய கண்டு பிடிப்புக்களிலீடுபட வைப்பனவாகவோ அமைவதில்லை. பெரும்பாலும் இந் நாடகங்கள் புராண, இதிகாசக் கதைகளாக அல்லது அறநெறி போதிக்கும் கதைகளாக அமைந்து விடுகின்றன. முதியவர்களது கண்ணோட்டத்தில் குழந்தைகளுக்குப் போதிக்கும் பொழுது பொருந்தாமை காரணமாக நேர்மையின்மை தோன்றக் காணலாம். அதாவது குழந்தைகளுக்குரிய அனுபவத்தில் பொய்மையும் போலித் தன்மையும் புகுந்து விடுகின்றன.

யுடன் ஈடுபடும் சிறுவர்கட்குப் பொருந்தாத நாடகங்களை இவர்கள் தயாரிக்கக் காரணம் என்ன?

காரணம், சிறுவர் நாடகம் பற்றிய எண்ணக்கரு(Conceprt) இவர்களிடம் காணப்படாமையே. நாடகம் பற்றிய எண்ணக்கருவே உருவாகாத சமூகத்தில் சிறுவர் நாடகம் பற்றிய எண்ணக்கரு எவ்வாறு உருவாகும்?

சிறுவர் நாடகம் மேற்கு நாடுகளில் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. விசேடமாக சோசலிஸ நாடுகளில் இத்துறை அரச மட்டத்தில் பிரத்தியேக கவனிப்புக்குட்பட்டுள்ளது. இரண்டு விதமான சிறுவர் நாடகங்களை நாம் வளர்ச்சியுற்ற நாடுகளிற் காணுகிறோம். ஒன்று பெரியவர்கள் சிறுவர்களுக்காக நடிக்கும் நாடகம், மற்றது சிறுவர்கள் பங்கேற்று நடிக்கும் சிறுவர் நாடகம்.

சிறுவர் நாடகத்தில் மிகப் பிரதானமான அம்சம் நடிக்கும் சிறுவர்களும், பார்க்கும் சிறுவர்களும் அந்த நாடகத்தில் குதூகலமாக எந்த வித உளத்தடைகளுமின்றி ஈடுபடுதலாகும். சிறுவர் நாடகத்தைப் பொறுத்தவரை நாடகத்தின் செம்மை அத்துணை முக்கியமன்று. அதன் மூலம் உருவாக்கப்படும் சிறுவர்களின் செம்மையே முக்கியமானதாகும். நாடகத்தில் இடம் பெறும் கதை சிறுவர்கட்கு உகந்ததாக அமைய வேண்டும். மாணாக்கர் ஆடல், பாடல் கேளிக்கைகளில் விருப்புடையோராதலால் நாடகத்தில் ஆடலும் பாடலும் நகைச்சுவையும் இணைந்து சிறுவரை எப்போதும் மகிழ்ச்சியிலீடுபடுத்த வேண்டும். சிறுவர் பருவம் விளையாட்டுப் பருவமாதலால் விளையாட்டில் ஈடுபடும் மனப்பாங்குடன் நாடகத்தில் ஈடுபடும் வகையில் நாடகம் ஒருவிளையாட்டுப் போல அவர்கட்கு அமைதல் வேண்டும். சிறுவர் எதையும் பெரிதாகக் கற்பனைசெய்வார்கள். எனவே மேடையில் அபிநயங்களும், ஒப்பனைகளும் பெரிது படுத்தப்படவேண்டும். மாணாக்கரின் மனப்பாங்கு பிரகாசத்தை விரும்புவதானமையினால் நடிகர்கள் மிகப் பிரகாசமான நிற ஆடைகளைப் பயன்படுத்த வேண்டும். சிறுவர்கள் கற்பனை வளம் நிறைந்தவர்கள்; அதிசயமானவர்கள், புதுமையானவர்கள். அவர்களின் வளம் நிரம்பிய கற்பனை உள்ளத்தை விளங்கிக் கொண்டு நாடகம் எழுதப்படவேண்டும். அவர்களின் கற்பனையை விரிவுபடுத்துவதாக நாடகம் அமைய வேண்டும்.

சிறுவர் நாடகம் பற்றிய பேராசிரியர் ஜி. சங்கரப்பிள்ளையின் கூற்று ஈண்டு நினைவு கூரற்குரியது. ''குழந்தைகள் அவைக்கு ஒருதனிப்பட்ட சுபாவம் உண்டு. அவர்களின் கற்பனை அதிவேகமாக இயங்கிக் கொண்டிருப்பதும், செயற்சக்தி பெற்றதுமாகும். முதியவர்களை விடச் சூசகமாக ஊகிக்கும் தன்மை அவர்களுக்கு இயல்பாகவே அமைந்ததாகும். உடலசைவுகள் மூலம் ஏற்படுத்தும் சிற்பங்களையும் புரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்குண்டு'' இந்த உண்மைகளை உள்வாங்கிக் கொண்டு நாடகம்தயாரித்தால் மாணாக்கர் தாமாகவே நாடகத்தில் ஈடுபாடு கொண்டு நடிப்பர். நடிப்பர் என்பதை விட விளையாட்டில் ஈடுபடுவர்.

பாடசாலைச் சிறுவர்களை நாம் பாலர், சிறுவர், மாணாக்கர் என வசதி கருதி முத்திறத்தினராகப் பகுக்கலாம். ஐந்து வயதுவரை பாலர் பாடசாலையிற் கல்வி பயிலும் மாணவர், ஆறு தொடக்கம் பத்து வரை சிறுவர் பாடசாலையிற் கல்வி பயிலுகின்றனர். பத்து தொடக்கம் பதினெட்டு வயது வரை இடைநிலை உயர் நிலைப் பாடசாலைகளில் கல்விபயில்கின்றனர். இந்த வயதெல்லை மிக முக்கியமானதாகும். மாணாக்கரின் - உள - உடல் வளர்ச்சி அவர்களின் வயதைப் பொறுத்துப் பெரும்பாலும் அமையும். சூழல், சமூகப் பின்னணி என்பனவும் இதிற் பங்கு கொள்ளும். இவையாவற்றையும் சிறுவர் நாடகக்காரர்கள் மனதிற் கொள்ள வேண்டும்.

**''... ஆறுவயதுப் பிள்ளையை ராதையாக்கி கண்ணனைக் காணாத விரகதாபத்தை அபிநயமாக்கவைப்பது அந்தப் பிஞ்சுவின்......''**

இதனால் இத்தகைய நாடகங்களிற் பங்கு பற்றும் சிறார்கள் இன்னொருவரைப் பார்த்து அவரைப் போல, போலச் (Imitate) செய்கிறார்களே தவிர தாமாக ஏதும் செய்யும்திறனை இழந்து விடுகிறார்கள். இவ்வகையில் அசலாக உருவாக வேண்டிய சிறுவர் நகலாக உருவாக்கப்படுகின்றனர்.

உதாரணமாக எமது சிறுவர் மத்தியில் இடம் பெறும் நாடகங்களை எடுத்துப் பாருங்கள். கர்ணன்— குந்தி கதை இவற்றுள் ஒன்று. கர்ணனின் அனுபவமும், குந்தியின் அனுபவமும் சிறுவர்களின் அனுபவத்திற்குட்படாத தொன்று. அன்றியும் தான் பிள்ளைகள் பெற்ற முறையையும் கன்னிப் பருவத்தில் தான் கர்ணனைப் பெற்றெடுத்த கதையையும் குந்தியாக வரும் சிறுவனோ சிறுமியோ மேடையில் ஒப்புவிப்பர். இவ்வார்த்தைகள் அவர்களின் அனுபவத்திற்கு மீறியவை என்பதுடன், சிறார்களின் மனப்பாங்கையும் இக் கருத்துக்கள் பாதிப்பன. பரத நடனகாரரிற் சிலரும் இவ்வண்ணமே ஆறு வயதுப் பிஞ்சுக்கு ராதை வேடமிட்டுக் கண்ணனைக் காணாமல் விரக தாப முறுவதாக அபிநயிக்க அப் பிஞ்சுக்குக் கற்றுத் தருவர். இங்கெல்லாம் பிள்ளை ஆசிரியர் சொல்லிக் கொடுப்பதைப் போலச் செய்கிறதே (Imitate) தவிர, சுயமாகச் சிந்தித்துத் தானே இயல்பாகச் செய்யும் பண்பை இழந்துவிடுகிறது. இக் குணாம்சம் தன்னம்பிக்கையை இழக்கச் செய்து மற்றவரிற் தங்கியிருக்கும் பண்பையே சிறாரிடம் வளர்க்கிறது.

இத்தகைய நாடகங்களை மேடையிடும் ஆசிரியர்கள் பற்றிப் பிழை கூறுவதற்கில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த இதய சுத்தியுடனேயே இதில் ஈடுபடுகிறார்கள். இதய சுத்தி

சிறுவர் நாடகங்கள் சிறுவர்களின் மனவளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தாததாக, அவர்கட்கு பாரம் தராததாக, அவர்களை அதில் மகிழ்ச்சியுடன் ஈடுபாடு கொள்ளச் செய்வதாக, அவர்களின் அழகிய திறன்களையும். அவதானிப்பு, நிதானம், கற்பனையாற்றல், எதையும் பகுத்துப் பார்க்கும் திறன், பொது நலப் போக்கு, தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு, பேச்சுப் பயிற்சி, உடல்விருத்தி போன்ற பல்வேறு குணாம்சங்களை விருத்தி பண்ணுவதாக அமைய வேண்டும்.

இத்தகைய சிறுவர் நாடகங்கள் தமிழர் மத்தியில் அதிகளவில் இல்லை என்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். தமிழ்நாட்டிலே கூட இத்துறை விருத்திபெறவில்லை. கி. ஆ. பெ. விசுவநாதன் போன்றவர்கள் கூட அறக்கருத்துக்களையும், இலக்கியக் காட்சிகளையும் சிறுவர்களை மனதில் வைத்து நாடகமாக்கினரேயொழிய சிறுவர் நாடகங்களாக அவை அமையவில்லை. சே. இராமானுஜம் அவர்களே இங்கு இத்துறையில் முன்னோடியாவார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

இரண்டாம் பரிசு குறுநாவல்

# வைகறை உணர்வுகள்

## கோகிலா மகேந்திரன்

7

''றைற் உங்கடை பேஜண்டை ராப்பம். அவரை அறைக்குக் கூப்பிட்டு 'ஹிப்னேடைஸ்' பண்ணுவம்''

மனோவைத்திய நிபுணரின் சொற்கள் அவளைக் கனவிலிருந்து மீட்டன.

அறையில் இருந்த கட்டிலில் சிவநேசன் நீட்டிநிமிர்ந்து படுக்க வைக்கப்பட்டார். கைகால்களைத் தளர்த்தி, தசைகள் எதையும் விறைப்பாக வைத்திராமல் இலேசாக வைத்திருக்கச் சொன்னார் நிபுணர்.

கூரையின் ஒரு புள்ளியைத் தொடர்ந்து பார்க்கச் சொன்னார்.

இப்ப உங்களுக்கு என்னுடைய குரல் மட்டுந்தான் கேக்கும் நீங்கள் முழுதா ஒய்வு நிலையிலை இருக்கிறியள். உங்கடை கால்கள் தளர்ச்சியாய் இருக்கு...... கையள் இரண்டும் இப்ப தளர்ச்சி நிலைக்கு வருது... இப்ப உங்கடை கண்கள் ஒய்வுக்கு வருது... உங்களுக்கு மெதுவா நித்திரை வருது.. உங்களுக்கு என்ரை குரலைவிட வேறை ஒண்டும் கேக்கேல்லை... நீங்கள் இப்ப ஆழ்ந்த நித்திரைக்குப் போயிட்டீங்கள் .. உங்களாலை இப்ப கண் முழிக்கவே முடியாது......''

இப்படியே ஒரே தொனியில் சொல்லிக்கொண்டு வந்தார் சிவநேசன் 'ஹிப்னேடிக்' நிலையை அடைந்து விட்டாரா என்று அறியக் கை விரல்களை அவர் முகத்துக்கு மேலே அசைத்துப் பார்த்தார். முகத்தில் எந்தவித மாற்றமும் காணப்படவில்லை. மிக இலகுவாகவே அவர் ஹிப்னேடிக் நிலைக்கு வந்துவிட்டார்.

இவர் பொதுவாகவே மற்றவரை எளிதில் நம்பிவிடும் ஆளுமை உள்ளவராக இருப்பார் என்று கல்யாணி நினைத்தாள். அதனாலேயேஇவர்வாழ்வில் ஏதும் பெரிய பிரச்சினைகளைச் சந்தித்திருத்தல்கூடும்.

ஆனால் காண்டீபன் அப்படியில்லை. யாரையும் எளிதில் நம்பிவிடமாட்டார். எவரையும் சந்தேகப்படுவார். ஆனால் எந்தநேரமும் கலகலப்பாக இருப்பார். கலகலப்பும் காண்டீபனும் இரட்டைப்பிறவிகள் என்றுகூட நினைக்கலாம். இவளைக்காணும்போதெல்லாம்உடலில் ஓடும் குருதி முழுவதும் முகத்துக்கு வந்த நிலையில் வெட்கப்படுவார். ஒரு ஆண் அவ்வாறுவெட்கப்படுவது அசதாரணம். அந்தஅசாதாரணமே அவளுக்கும் பிடித்திருந்தது. அதைக் காதல் என்று நினைத்தாள்.

அது காதல்தான் ஒருவகையில். அது காதல் என்று நம்பித்தான் இவள் அவரது பெற்றோருடன் பேசிப்பார்க்கும்படி அவரது நண்பர் ஒருவரைத் தூது விட்டாள். பேச்சு வார்த்தை நடந்தது அப்போதும்காண்டீபன் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. பெற்றோர் ஒரு 'டொகடர் மாப்பிளை'க்குத் தேவையான சீதனம் கேட்டனர். அவ்வளவு கொடுக்கும் வசதி இவள் வீட்டில் இல்லை. அதே நேரம் அந்தச் சீதனப் பேயை விரட்டி விட்டு வரும் துணிவு காண்டீபனுக்கு இருக்கவில்லை. நடந்து வந்த ஈரமான சுவடுகள்!

இன்றைய தமிழ் மண்ணில் ஒவ்வொரு இளைஞனும் உயர் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பாரபட்சம் காட்டப்பட்டு மனம் நொந்துவாழ்வது போல்... இன்றைய தமிழ்மண்ணில் ஒவ்வொரு பெண்ணும் சீதனப் பிசாசின் கொடுமையான வாய்க்குள் அகப்பட்டு...


இவளும் அதற்கு விதி விலக்காகவில்லை.

பெண்கள் திருமணம் செய்யாமல் இருக்க முடியாதா? முடியும் என்றுதான் இவள் நினைத்திருந்தாள்.

ஒரு பெண்ணின் உயர்கல்வி திருமணத்திற்குத் தடையாக இருக்கிறதென்றால், கல்வி கற்காமல் இருப்பதை விடத் திருமணம் செய்யாமல் இருப்பது சிறந்தது என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால்இந்த மனம்... இந்த விருப்பம் ... என்ன இது?

இனப் பெருக்கம் செய்யும் இயல்புள்ளதுதான் உயிரி. ஆகவே திருமணம் நடைபெறாத வாழ்வு, பிள்ளை பெற்றுக்கொள்ளாத வாழ்வு உயிரியல்ரீதியில் தோல்வியடைந்த வாழ்வு தானே!

தனது மன உணர்வைச் சரி என்று கூறிப் போரிட அறிவும் துணைக்கு வந்திருப்பது இவளுக்கு அதிசயமாக இருந்தது.



'ஹிப்னேடிக்' நிலையில் அவரது அடி மனதுக்குச் சில ஆலோசனைகளைச் சொல்ல இப்போது நிபுணர் ஆயத்தமானார்.

''இப்ப நீங்கள் ஆழ்ந்த உறக்கத்திலை இருக்கிறியள்– ஆழ்ந்த ஹிப்னேடிக் உறக்கம். உங்களுக்கு இப்ப என்ரை குரலைத்தவிர வேறை எதுவும் கேட்காது. நீங்கள் இண்டையோடை புகைக்கிற பழக்கத்தை மறந்திடுவீங்கள். இதனாலை உங்கடை வாழ்க்கை ஒரு நல்ல திருப்பத்தை அடையுது...ஒரு கெட்ட பழக்கம் உங்களை விட்டிட்டுப் போகுது. அதனாலை நீங்கள் சந்தோஷமும், திருப்தியும், நிறைவும அடையப்போறீங்கள்...இநதப் பழக்கத்தை விட்டதாலை நீங்கள் எந்த விதத்திலையும் பாதிக்கப்பட மாட்டீங்கள்...நீங்கள் இந்த நித்திரையிலையிருந்து எழும்பினப்பிறகு...உங்களுக்கு எதுவுமேஞாபகம்இருக்காது... ஆனல் இந்தப் பழக்கம் ஒரு கெட்ட கனவாய் போயிடும்... றைற்...இப்ப நீங்கள் படிப்படியாப் பழைய நிலைக்கு வாறீங்கள்...உங்கடை கண்களின்ரை பாரம் குறையுது... கண்ணை முழிக்கலாம் போலை இருக்கு... சரி...இப்ப நீங்கள் கண்ணை முழிக்கப் போறீங்கள்...''

சிவநேசன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். அப்போது அறையினுள் நுழைந்த ஒரு 'சைக்கோ பிறீனிக்,' ''என்னய்யா எனக்கு ஊசி போடுறீங்களா? அனு, ஆவென்னு, ஈனு,இங்கிலாந்து, ஹெலிக் கொப்டர் இங்கிலாந்துக்குப்... போகுது...'' என்றாள்.

''இவைக்குத் தனியா ஒரு இல்லம் அமைக்கிறது பற்றி நான் 'சீறியஸா' யோசிக்கிறன். எனக்கு உதவிறதுக்கு யாரும் ஒரு ஸ்தாபனம் முன்வர வேணும்...'' என்றார் நிபுணர்.

பின்னர், சிவநேசனைப் பார்த்து,

''ஹௌ டு யூ ஃபீல்?'' என்று கேட்டார்.

''நல்ல நித்திரை கொண்டு எழும்பின மாதிரி இருக்கு...''

''வேறை என்ன ஞாபகம் இருக்கு...?''

''நீங்கள் என்னை இதிலை படுக்கச் சொல்லி ஒரு புள்ளியைப் பாக்கச் சொன்னீங்கள். அப்பிடியே நித்திரையா கிட்டன் போலை இருக்கு...''

''றைற்...குட்...இந்த மாதிரி இன்னும் இரண்டு மூண்டு நாள் செய்து பாப்பம்...''

மனோவைத்திய நிபுணர் புறப்பட ஆயத்தமானார்.

''எப்பிடிப் போகப் போறீங்கள்? இண்டைக்கு பஸ்ஸெல்லாம் சரியான சனம் எண்டு கேள்வி.''

ஆய்வு கூடப்பக்கமாக இருவரும் நடந்து வந்து கொண்டிருக்கையில் இவள் கேட்டாள்.

''ஏன்? என்ன விசேஷம்?''

''உங்களுக்குத் தெரியாதா? மனனாரிலை செத்தங்களின்ரை சவம் கொண்டந்திருக்கிறுங்கள் பெடியள். உயிரோடை பிடிச்ச இரண்டு பேரையும் கொண்டந்திருக்கிறுங்கள். அதுதான் சனம் அள்ளுப்பட்டுப் போகுது பாக்க...''

''நான் காலமை பேப்பரே பாக்கேல்லை. அதிலை எனக்கு உலகமேதெரியாமல்இருக்கு.''

நிபுணர் சிரித்துக் கொண்டார்.

''பெடியள் படிப்படியா எல்லா விஷயங்களையும் தங்கடை கட்டுப்பாட்டுக்குள்ளை கொண்டு வாறுங்கள்...அரசாங்க ஊழியருக்குச் சம்பளம் குடுக்கிறது மாத்திரந்தான் இப்ப 'அவை' செய்யினம்...''

''எங்கடை உணவுத் தேவையை நாங்கள் சமாளிக்க முடியுமெண்டா...... சம்பளம் ஒரு பிரச்சினை இல்லை...''

''எங்கடை அடிப்படைத் தேவையளை நாங்கள் பூர்த்தி செய்யிறதுக்கு முயற்சி எடுக்க வேணும்...சனம் அதைப்பற்றிக் கவலைப்படேல்லை. எல்லாம் பெடியள் செய்வாங்கள் எண்டு பேசாமல் இருக்கப் பாக்கினம்...''

கதைத்த படியே வந்த நிபுணர் வெளியேற இவள் ஆய்வு கூடத்திற்கு வந்தாள்.

ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் ஞானசேகரன் கேட்டார் அந்த நோயாளியிடம்,

''நீங்கள் எத்தினை மணிக்குச் சாப்பிட்டனீங்கள்?''

''பன்னிரண்டு மணிக்கு...''

''இப்ப மூண்டு மணியாகுது. உங்கடை சோதனைக்குச் சாப்பிட்டு இரண்டு மணித்தியாலத்திலை இரத்தம் எடுக்க வேணும். இனி எடுக்க முடியாது...''

அறையில் இருந்து அந்தப் பெண் நோயாளி வெளியேறினார்.

கல்யாணி ''மெடிக்கல்வாட்'' டில் ஒரு நோயாளியின் ஈ. எஸ். ஆர் மிகவும உயர்வாக இருப்பது பற்றி ஞானசேகரனுடன் கதைதது க்கொண்டிருக்கும் போது,வெளியேறிய பெண் மீண்டும் வந்தாள் தன் மகனுடன. அந்த மகன் சொன்னான்.

''அம்மா ஒரு மணிக்குத்தான் சாப்பிட்டவ. நீங்கள் இரத்தம் எடுங்கோ...''

ஞானசேகரன் அவனைப் பார்த்த பார்வை எரித்து விடுவது போல் இருந்தது.

நோயாளிகள் சிலர் வைத்திய சாலையினுள் 'சிலவ ஸியராக' நடவாதிருப்பதற்கு... தம்மையும் ஏமாற்றி அதன் மூலம் மற்றவர்களையும் ஏமாற்ற முனைவதற்கு அவர்களின அறிவீனம் மட்டுந்தான் காரணமா அல்லது வேறு காரணங்களும் இருக்குமா என்று இவள் சிந்திகக முனைந்தாள்.

* * *

மேற்கிலே ஒரு மாலை மடிந்து ஆமை போல் இருள் வநது நின்றதோர் வேளையில், மிஸ்டா சிவநேசன் வீட்டு வாயிலில் கல்யாணியும் பூரணியும் வந்திறங்கினர்.

முற்றம் முழுவதும் மூடிநின்ற மல்லிகைப பந்தலின் முகப்பிலே கதலி வாழைகள் பல நட்டுக் கிடந்தன. பாட்டம் பாட்டமாய் வந்தவாடைக்காற்று மல்லிகை மலர்களைத் தழுவி வந்த போது நறுமணம் நிறைந்து வந்தது.

சிறிய வீடுதான்! யன்னல்களில் சேலைகள்தொங்கவில்லை. முற்றததில் கோலம் போடப்படவில்லை. சுவர்களில் காணப்பட்ட 'கிறில்'களுக்கிடையில், ஒட்டறைகள துடைக்கப்படவில்லை. 'ரீபோ'வில் பூச்சாடி இல்லை. மொத்தத்தில் நீணட காலமாய் ஒரு இல்லததரசியை எதிர்பார்த்து நிற்கும் வீடு!

சாய்கதிரையில் படுத்திருந்த கிழவி- தாயாக இருகக வேணடும— இவர்களைக கண்டவுடன் 'தம்பி!' என்று குரல் கொடுத்தாள்.

சிவநேசன் உள்ளிருந்து வெளியே வந்தார். வழமை போலவே நல்ல தோற்றத்தைத் தரும் உடை அணிந்திருந்தார். சிரித்தபடி ''இருங்கோ'' என்றார்.

''வேறை யார் யார் 'பார்ட்டி'க்கு வருவினம்?''

'ஈழநேசனிலை வேலை செய்கிற ஆக்களை அழைச்சிருந்தன் அவை வந்து போயிட்டினம்...''

''ஹெவி ஸ்மோக்கரா ருஇந்த நீங்கள் ஒரு மாதமாய் சிகரெட்டைத் தொடாமல் இருக்கிறது பெரிய விஷயம். அதை நீங்கள் வடிவாக்கொண்டாடியிருக்கலாம்...''

நான் படுற கஷ்டம் எனக்கெல்லோ தெரியும்..''— சிரிப்பை ஒத்த நடுக்கம் அவரது உதடுகளில் ஓடிற்று

பத்துப் பன்னிரண்டு நாட்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டுப் பளிச்சென்று முன்னால் நிற்கும் சிவநேசனின் அந்த முகம், 'டிபிரெசன், விரக்தி வேதனை கலந்த அந்த முகம்!

ஆஸ்பத்திரியில் இருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு நாளிலேயே அவர் இவளைத் தேடி வந்து விட்டார், ''என்னாலை எலாது டொக்டர்'' என்று கூறியபடி அவரது நிலை மிகப் பரிதாபகரமாக இருந்தது.. இலையெல்லாம் உதிர்த்துவிட்டமரம் போல...!

''காலமை எழும்பிக் கண்ணாடியிலை முகம் பாக்கேக்கை ...எனக்கு முகமே இல்லாத மாதிரி இருக்கு டொக்டர்...'' என்று சொல்லும்போது அவர் கண்கள் கலங்கியே விட்டன. மனதில் இருப்பதைக் கொட்டித்தீர்க்கட்டும என்றுஅவள் பேசாமல் இருந்தாள். பின்னர்,

''எங்கட பெடியள் அந்தச் சவங்களை எல்லாம் கொண்டு போய்... காம்பிலை 'அவங்க' ளிட்டைக் குடுததிட்டாங்களாம்... என்ன... இதை விடத் திறமான அலுவல் வேறை இல்லை எண்டு சனம் எல்லாம் பாராட்டுது...''

என்று கதையை வேறுதிசையில் அவள் திருப்பினள். ஆனல் அவர் திருப்பவில்லை தனது பிரச்சினையிலேயே நின்றார்.

''எனக்கு வாழ்க்கையிலை இருந்த ஒரே ஒரு ஆதர இந்த சிகரெட்தான்... இப்ப அதுகும் இல்லை. 'கான்சர்' வந்தால் வந்திட்டுப் போகட்டும் எண்டு மறுபடியும் குடிக்கத் தொடங்கியிருப்பன்... உங்கட வெறுப்பைச் சம்பாதிச்சிடுவனோ எண்ட பயம் மட்டும் இல்லாமலிருந்தால்...''

அவருக்கு மேலெல்லாம் வேர்த்தது. வேர்த்த போதே விறைத்தது.

''என்னுடைய வெறுப்பைச் சம்பாதிச்சா...என்ன?'' அவள் வேண்டுமென்றே கேட்டாள்.

அவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். காற்றை உள்ளிழுத்து உமிழ்ந்தார். பிறகு சொன்னார்,

''நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு மனம் வைச்சு எனக்கு வைத்தியம் செய்தீங்கள், அது தோற்றுப் போறது உங்களுக்கும் வேதனையா இருக்கும்... அந்த வேதனையை உங்களுக்கு ஏற்படுத்த நான் விரும்பேல்லை''

கையைத் தூக்கி மேலே போட்ட குழந்தையின் நிலை மாதிரிச் சில விஞடிகள்! அவர் பார்வை அவளில் நிலைத்தது.

அவள்வெளியே பார்த்தாள். 'அசோகா' மரம் யன்னலூடாகச் சற்றேனும் அசையாமல் நின்றது. கொஞ்சநேரம் போனபிறகுஎல்லோரும் இந்த வைத்தியசாலையை விட்டுப் போய்விடடால்,

(போக மாட்டார்களென்று அதற்கு எப்படித்தெரியும்?)... அந்தமரம் தனிமையில் காற்றுடன் சேர்ந்து ஒரு இனிமையான பாடலைபாட இருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

''நல்லது உங்கடை 'டிபிரெசன்' குறையிறதுக்கு ஒரு குளிசைதாறன் அதை மூன்று நேரமும் போடுங்கோ...வாழ்க்கையிலை வேற சந்தோஷங்களைத் தேடிக்கொள்ளுங்கோ... முக்கியமாத் திருமணம் செய்து கொள்ளுங்கோ..''

அவர் அதற்குப் பதில்சொல்லாமலே எழுந்துபோய்விட்டார். இந்த அபிப்பிராயத்தை அவளால் எப்படிச் சொல்ல முடிந்தது என்று சிந்தித்தாரோ? அல்லது ஏன் சொன்னாள் என்றுசிந்தித்தாரோ? ஒரு வேளை ஒன்றுமே சிந்திக்கவில்லையோ? (வளரும்)

வைத்திய கலசம்- 12

# மதுவை எதற்காக மறக்க வேண்டும்?

டாக்டர் எம். கே. முருகானந்தன்

★ விளையாட்டாகவோ, அல்லது பரிசோதனை செய்து பார்ப்பதற்காகவோ ஆரம்பிக்கும் மதுப்பழக்கம், படிப்படியாக வளர்ந்து மதுவிற்கு அடிமையாகும் நிலைக்கு (Alcohol Dependance) இட்டுச் செல்கிறது.

★ மதுவுக்கும், போதை வஸ்துக்கும் அடிமையானவர்கள் அதை வாங்குவதற்கு வேண்டிய பணத்தைத் திரட்டுவதற்காகப் பொய் சொல்லவோ, களவு எடுக்கவோ, ஏன் கொலை செய்யக்கூடத் தயங்கமாட்டார்கள்.

★ மறதி, வேலைகளில் கவனக்குறைவு, பய உணர்வு, தூக்கமின்மை போன்ற வேண்டாத விளைவுகள் ஏற்படும்.

★ மது போதையில் இருப்பவர்கள் வாகனங்களை ஓட்டுவதால் பயங்கரமான வீதி விபத்துகள் ஏற்படுகின்றன.

★ குடற் புண்கள் ஏற்படலாம்; ஏற்கனவே உள்ள குடற் புண்களில் இரத்தப் பெருக்கம் (Haemorrage) இரைப்பையில் துளையுண்டாதல் (Perforation) போன்ற பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

★ குடற் புற்றுநோய் ஏற்படலாம். அத்துடன் வாய், உணவுக்களம் (Oesophagus) ஈரல் போன்றவற்றில் புற்றுநோய் ஏற்படுவதற்கும் காரணமாக அமையலாம்.

★ மதுவினால் ஏற்படும் மிக அதிகமானதும், மோசமானதும் ஆன தாக்கம் ஈரல் சிதைவாகும் (Cirrhosis) இதைக் குணப்படுத்துவது கஷ்டம். இது படிப்படியாக மோசமடைந்து மரணத்தைக் கொண்டுவரலாம். எனவே மதுவைத் தவிர்த்து, ஈரல் சிதைவைத் தடுங்கள்.

ஈரல் சிதைவின் ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால், மதுவை மீண்டும் எப்போதுமே அருந்தாதீர்கள். புரதம், வைட்டமின் நிறைந்த சத்தான ஆகாரங்களை சாப்பிடுங்கள்.

★ சாராயம் கூடாது. ஆனால் கள் குளிர்மையானது, சூட்டைத் தணிப்பது எனவே கள் குடிப்பது நல்லது என்பது பிழையான தகவல்.

சாராயத்திற்கு ஏற்படும் அவ்வளவு விளைவுகளையும் கள்ளும் ஏற்படுத்தும். அத்துடன் கள்ளில் சிலவேளைகளில் கலந்திருக்கும் அமீபாக கிருமி காரணமாக, வயிற்றுளைவு (Amoebic Dysentry), ஈரல் அழற்சி (Amoebic Hepatitis) ஈரலில் அமீபாக் கட்டு (Amoebic Liver Abscess) போன்ற கடுமையான நோய்கள் ஏற்படலாம்.

★ ஒரு பனைக்கள்ளு நல்லது, உடன் கள் நல்லது என்பவையும் ஆதாரமற்ற பிழையான நம்பிக்கைகளே.

★ மதுவினால் பணச்செலவு அதிகமாகிறது, கடன் ஏற்படுகிறது, கடைசியில் குடும்பமே சீர்குலைந்து போகிறது.

★ வைத்திய சிகிச்சை முறைகளும்—மதுவை நிறுத்த நீங்கள் விரும்பினால்—பெரிதும் உதவக்கூடும்.

## நகைச்சுவை இலக்கியம்

கண்ணுக்குத் தெரிவதை எல்லாம் நாம் பார்ப்பதில்லை. பார்ப்பது எல்லாம் நமக்குப் புரிவது இல்லை. புரிந்ததை எல்லாம் நாம் அனுபவிப்பது இல்லை. அனுபவிப்பதை எல்லாம் நாம் ஆக்கல் திறனுடன் படைப்பதில்லை. இலக்கிய வாதியோ, இவை அனைத்தையும் சேர்த்துச் செய்கிறான்; சிறப்பாகச் செய்கிறான். அதுவே அவன் அற்புதப்படைப்பு. அறிவு மட்டும் போதாது, எழுத்தாளனுக்கு; ஆர்வம் வேண்டும். ஆர்வம் மட்டும் போதாது; ஆற்றல் வேண்டும். ஆற்றல் மட்டும் போதாது; அனுபவம் வேண்டும். அனுபவம் மட்டும் போதாது; ரசனை வேண்டும். ரசனை மட்டும் போதாது; பண்பு வேண்டும். அத்தனையும் ஒருங்கே திரண்டு உருவாய், உணர்வோடு உயிர்ப் படைப்பாய் அமைவதே உயர் இலக்கியம். அந்த இலக்கியத்தில், நயமும் நாகரிகமும் நளினமும், இதமும், இயல்பும், இனிமையும் கலந்து விளங்குவதே, சிறந்த நகைச்சுவை இலக்கியம்.

தகவல்: கணேஷ்




# தம்பதியர் பெறவேண்டிய பதினாறு பேறுகள்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும் கழுபிணி இல்லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும்
மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒன்றுந்
துன்பம் இல்லாத வாழ்வும் துய்ய
உன்பாதத்தில் அன்பு முதல் இப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாலோனது தங்கையே
ஆதிக்கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

[அபிராமி அம்மைப்பதிகம்]

★ பாமீரதி. ஆர்
நெடுங்கேணி

## பல்நாட்டுப் பழமொழிகள்

★ தாயின் தியாகம் அளவிட முடியாதது. தாய் தன் கண்களை விளக்காக்குகின்றாள்; கையைத் தொட்டிலாக்குகின்றாள்; இரத்தத்தைப் பாலாக்குகின்றாள்.
—சீனா

★ எனக்குப் பாதரட்சைகள் இல்லாததை எண்ணி வருந்திக் கொண்டே இருந்தேன்; பாதங்களே இல்லாத ஒரு மனிதனைக் கண்டபின் என் வருத்தம் தீர்ந்தது.
—அரேபியா

★ பணம் அறிவாளர்களுக்கு அடங்கித் தொண்டு செய்யும்; ஆனால் மூடர்களை ஆட்சி செய்யும்.
—பிரான்ஸ்

★ பயத்தினால் மட்டும் இறைவனைத் தொழுவோர் சயித்தான் வந்தால் அவனையும் தொழுவர்.
—இங்கிலாந்து

★ கீழே விழுந்தவனைக் கண்டு சிரிக்க வேண்டாம்; உன் பாதையும் வழுக்கல் நிறைந்தது.
—ரஷ்யா

★ தாய் நாட்டிற்காக மடிவது உயர்வு; அதைவிட உயர்வு தாய் நாட்டிற்காக உயிர் வாழ்வது.
—ஹங்கேரி

★ உன் தலைக்குச் சேராத தொப்பியை அடுத்த வீட்டுக்காரர் தலையில் போடாதே.
—இந்தியா

★ தீமை வெளியே போயிருந்தால்தான் நன்மை வீட்டுக்குள் வரமுடியும்.
—ஸெக்கோஸ்லவாக்கியா

★ நேர்மையாளன் ஓர் எலும்புத் துண்டுக்காகத் தன்னை நாயாக மாற்றிக்கொள்ள மாட்டான்.
டென்மார்க்

★ பாம்பைக் கண்டுபிடிக்க விளக்கை எடுப்பவன் முதலில் தன் காலடியைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
—கிரீஸ்

தொகுப்பு:- நயினை இராகுலம்

## இறைவா நீயும் வெளிநாடா?

ஐயகோ!
இறைவா!!
வெளிநாடு சென்ற
எம்மவரோடு
நீயும்
வெளிநாடு
சென்று விட்டாயா?
இல்லையெனில்
ஏன்?
இவ்வளவு
அராஜகங்களையும்.
பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

★ கு. சுரேஷ்

## கடி எறும்பு

கடிஎறும்பு என்றதும் எமக்குப் பயவுணர்ச்சி வந்துவிடுகிறது. காரணம் அது குத்துவதால் ஏற்படும் வலி உணர்ச்சி ஆகும். கடிஎறும்பு எமக்குக் கடிப்பதில்லை. அது குத்துகிறது. அதன் பிற்பகுதியில் பல்புப் போன்ற ஒரு பகுதி இருக்கிறது. அதற்குள் "லாக்டிக் அமிலம்" இருக்கிறது. இது தனது கொடுக்கின் மூலம் இந்த அமிலத்தை ஊசி போடுவது போல நம் உடலுக்குள் செலுத்தி விடுகிறது இந்த அமிலம் தான் எமக்கு வலி உணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

—அரஸ்

## எலிகளை அழிக்க பூனைப்பண்ணை

சீனாவில் கோடிக்கணக்கான எலிகள் தானியங்களை உண்டு தானிய உற்பத்திக்குப் பெரும் குந்தகம் விளைவிப்பதால் சீன அரசு எலிகளை ஒழிக்கத் திட்டம் வகுத்துள்ளது. 1982இல் சீனாவின் மொத்தத் தானிய உற்பத்தியில் ஏழு சதவீதம் எலிகளாலும் சுண்டெலிகளாலும் உண்ணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது 27 கோடி தொன் தானியங்களாகும். மேலும் 130 கோடி ஏக்கர் விவசாய பூமியில் எலிகள் பெருகியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த எலிகளை ஒழித்துக்கட்ட 1983இல் முதல் பூனைப் பண்ணை நிறுவப்பட்டது. இப்பண்ணை எலிகளைப் பிடிக்கக்கூடிய 2400 பூனைகளை உற்பத்தி செய்துள்ளது. இப்பண்ணையில் 250 வகையான பூனைகள் உள்ளன. இவற்றுள் சில இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன. சீனாவின் சிலபகுதிகளில் வளர்ப்புப் பூனை உணவுக்காகவும் உபயோகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது.

நன்றி: ரீடேர்ஸ் டைஜஸ்ட்

தொகுப்பு: பசுபதி பாலமுகுந்தன்

## புத்தர் புழுவாய் துடிப்பார்

பெருமகனாய் அவதரித்த
புத்தபகவானும்
பேரரசராய் ஆண்டுவந்த
காலத்திலே
உயிரினங்கள் பட்டதுன்பத்தை
கண்ணாலே கண்டு
கண்ணீர் சிந்தி
உளங்கனிந்து அகற்றிடவே
யென்று
உள்ளமதில் கோயில் கொண்ட
இல்லறத்தை விட்டு
உலகறிந்த நாட்டரசர்
பதவியைத் துறந்து
கனிவுடனே காடுமேடெல்லாம்
அலைந்த புத்தபகவானின்
அரிச்சுவட்டிலேயவதரித்த
ஆரியராம் பெரும்பான்மையினர்
சிற்றரசராய் இக்காலத்தில்
செய்யும் செயல்களோ
சொல்லுமளவிற்கில்லையே
திராவிட வம்சத்திலவதரித்த
சிறுபான்மையினரின்
சிறு உரிமைகளைக் கூடப்
பறித்தெடுத்து
சின்னாபின்னமாக்கி
சித்திரவதை செய்யும்
சிங்கள இன வெறியர்களின்
திருவிளையாடல்கள்
பௌத்தமதத்தில் ஓரிடத்திலும்
பதிக்கவில்லை.
இதனைப்
புத்தர் கண்டால்
புழுவாய்த்துடிப்பார்.

—காரை-நா. குகநேசன்

## அவிழ்த்துப் பாருங்கள்

1. காலில்லாத கயவன் கண்ட இடமெல்லாம் போவான்?
குடை

2. கண்ணுண்டு தலையில்லை?
ஊசி

3. களனியில் விளையும் புல்லை கத்திரியால் வெட்டலாம்?
தலைமயிர்

4. காலுமில்லை கையுமில்லை முகட்டைத் தாண்டி மேலே போகும்?
புகை

5. கஷ்டப்பட்டு நூல் நூற்பார் கட்டிக் கொள்ளத் துணியில்லை?
சிலந்தி

6. கரிய பாம்புகள் இரண்டு அருகருகே கிடக்கின்றன?
தண்டவாளம்

★ பா. தேவராஜ்

## விமானக் கடிதங்கள்

விமானக் கடிதங்கள்
விடியும் போதே
வீடுகளைத் தேடி
வந்து விடுவதுண்டு.
இப்போது நேரடியாக
விமானங்களிலிருந்தே
வந்து விழுகின்றன.
இவை
நம்மைப் பூண்டோடழிக்கும்
நச்சுக் கடிதங்கள்,
நயவஞ்சகக் கடிதங்கள்!

—கணேஷ்

## சற்றே சிரிப்போமா?

இளைஞர்:- நான் புது நாய் வாங்கியிருச்கியிருக்கிறேன் வந்து பார்க்கிறீர்களா?

வயோதிபர்:- அது கடிக்குமா?

இளைஞர்:- அதைத் தெரிஞ்சு கொள்ளத்தான்...

பல்லு போனதாத்தா:- ஹலோ டெலிபோன் ஒபிஸ் தானே? நான் இங்கிருந்து யாருக்கு, போன் பேசினாலும் க்ரொஸ்ரோக் கேட்கிறது.

ஒபிஸார்:- இதோ வந்து ரிபெயர் செய்கிறோம்.

தாத்தா:- வேண்டாம்! அந்த ஸ்வீட் லேடி வொய்ஸ் அட்ரஸைக் கண்டு பிடித்து சொன்னால் போதும்.

ஆனந்:- உங்கள் மனைவி எங்கே?

விநோத்:- கோவிச்சிட்டு அவட அம்மா வீட்டுக்கு போய்விட்டா?

ஆனந்:- அப்படி கோவிச்சு அவட அம்மா வீட்டை போக என்னடா பண்ணணும் எனக்கும் கொஞ்சம் சொல்லித் தாவன்டா ப்ளீஸ்.

—ஸ்வீற்றி



# தடைகள் தாண்டப்படுகின்றன

சிறுகதை

## மு. வே. யோ. வாஞ்சிநாதன்

அந்த மாபெரும் 'மே' தின ஊர்வலத்தைப் பார்த்தபின்பும் அவனுல் பொறுமையாக இருக்க முடியவில்லை. இன்று எப்படியாவது படலையைத் தாண்டுவதென்ற முடிவுடன் அப்புவின் அறையைத் தாண்டி நடக்கிறுன். எத்தனை காலத்துக்குத்தான் இந்த விடுதலை உணர்வுகளை அமுக்கி, இதயத்துக்குள் வைத்திருக்க முடியும்?

அப்புவுக்கு என்ன?

கச்சேரியில் அவர் ஓ. ஏ. ஆக இருந்தவர்... 'பென்ஷன்' எடுக்கத் தொடங்கி மூன்று வருடங்களாகி விட்டன. ஆனாலும், அரச அடிமைத்தனம் மட்டும் இன்னும் குறையவில்லை...அரசுககு மாருக நடப்பதைக் கண்டிப்பதும்... தேசியம் பேசுவதும், அவருக்குப் பழகிப்போனவை...

சிங்களம் 'பாஸ்' பண்ணிலுல்தான் உத்தியோக உயர்வு என்ற சட்டம் வந்த அடுத்த நாளே அப்பு புத்தகமும் கொப்பியுமாக 'பண்டா' மாஸ்டரைத் தேடி ஓடினவர்...இரவிரவாக விழுந்து, விழுந்து படிப்பார்...

கச்சேரியில் சாதாரண கிளாக்காக சேர்ந்த அவர், ஒருவருடத்திலேயே சிங்களத்தைப் பாஸ் பண்ணினுர்...... கொழும்பிலிருந்த அரசியல் வாதிகளான தமிழ் எம். பி க்களுக்கும் அப்புவுக்கும் அப்போது நல்ல 'ஒட்டு'......

சாதாரண கிளாக்... 'சீப்' கிளாக்காகி... 'சீப்' கிளாக்..., ஓ. ஏ. ஆனபோது அப்புவின் தேசிய உணர்வுகள் பொங்கி வழியத் தொடங்கின...பல்கலைக் கழகத்தில் தரப்படுத்தல் முறை அமுலுக்கு வந்த போது என் அண்ணன் ரமேஸ் ஏ. எல். இறுதி ஆண்டில் (சயன்ஸ்) படித்துக்கொண்டிருந்தான்...

யாழ்ப்பாணத்தில் விழுந்து, விழுந்து படித்த பொடியளெல்லாம் 'தரப்படுத்தல் முறையால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் மனமுடைந்து சிலர் தற்கொலை செய்து கொண்டனர்...... வேறு சிலர் போராளிகளுடன் சேர்ந்து கொண்டனர்... வேறு சிலர் வெளிநாடு போயினர்...இன்னும் சிலர் மதகுகளிலும் சந்திகளிலும் கூடிப் பொழுது போக்கினர்.

அரசின் அடக்குமுறைகளும் கட்டுக்கடங்காமல் நடந்தன... ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் அடக்குமுறைகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர்...

வீடு வீடாக இராணுவம் வந்து சோதனையிட்டது ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் குற்றம் எதுவுமின்றிக் கைது செய்யப்பட்டு வெலிக்கடைக்கும், தள்ளாடிக்கும், பூசாவுக்கும் அனுப்பப்பட்டனர். வேறு சிலர் வீதிகளில் கண்டபடி சுட்டுக் கொல்லப்பட்டனர்...

எங்கள் வீட்டுக்கும் 'ஆமி' வந்தது...

அப்பு சிங்களத்தில் விளாசித் தள்ளினுர்...

ஜே. ஆர்., பிரேமதாசா, டட்லி போன்றேரின் படங்களும், தமிழ்த் தலைவர்கள் சிலரின் அழகான உருவங்களும் எமது வீட்டுச் சுவர்களை நிறைத்திருப்பதைக் கண்ட 'ஆமி'க் குழுவின் தலைவன் அப்புவுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசினுன்...

விசாரிக்க வந்தவர்கள் விருந்தினர்களாயினர்...

மெண்டிஸ் ஸ்பெஷல் பரிமாறப்பட்டது ..சிகரட் மணம் மூக்கைத் துளைத்தது... பின்னர் கைகுலுக்கி விடை பெற்றுச் சென்றது இராணுவம்...

அண்ணன் ரமேஷ் ஏ. எல். சோதினை எழுதிய கையோடு அப்பு கொழும்புக்குப் போனுர்... ஐந்தாம் மாதம் ரமேஷ் அண்ணனுக்கு மெடிசினுக்கு 'போம்' வந்திருந்தது...

பக்கத்துவீட்டு லோகநாதன் ரமேஷ் அண்ணனை விட முப்பது புள்ளிகள் அதிகமாகப் பெற்றிருந்தான்... அவனுக்கு பி. எஸ். சிக்குக் கூட போம் வரவில்லை...

அப்பு பெருமையுடன் மீசையை முறுக்கிக்கொண்டார்... அப்போது நான் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன்...

''எட கணேஷ்... நீயும் நல்லாய்ப்படி உனக்கு என்ஜினியரிங் எடுத்துத் தாறன்...'' —அப்பு பெருமையுடன் கூறிக் கொண்டார்...

தினமும் பத்திரிகைகள் ஒன்றையும் விடாமல் வாசிப்பது என் வழக்கம் ...நாட்டில் தினமும் நடக்கும் அநியாயங்களையும், அட்டூழியங்களையும் வாசிக்கும் போது விழிகள் கலங்கும்.

''எட...உனக்கு நெடுகப் பேப்பர் வாசிக்கிற வேலையே... இனிமேல் பேப்பரைத் தொட்டியென்டால் பல்லை உடைப்பன்...''

ஒரு நாள் அப்புவிடமிருந்து எனக்கு நல்ல பூசை கிடைத்தது...அதன் பிறகு எங்கள் வீட்டுக்குத் தமிழ்ப் பத்திரிகைகள் வருவதில்லை. 'டெய்லி நியூசும், தினமினுவும்' தான் யாருக்குப் புரியும் அவை?...

'ரியூசனுக்குப்' பின்னேரம் போய் வரும்போது பாரதி படிப்பகத்துக்கும் சென்று பத்து நிமிடங்கள் தமிழ்ப்பத்திரிகைகளை வாசிப்பேன்... அந்தப் பத்து நிமிடங்களுக்காக, தினமும்அப்புவின் பத்து விதமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருந்தது.

கொஞ்சம் பிந்தி வீடு சென்றுல் அப்புவின் பிரம்புக்குப் பதில் சொல்ல முடியாது...

என்ன வாழ்க்கை இது?

அடிமை வாழ்வு...!

வெளியே நடப்பதைப் பற்றிக் கேட்க, பேச, படிக்க உரிமையற்ற வாழ்வு...என்னுடன் கூடப்படித்தவர்களில் சிலர் திடீர் திடீரெனக் காணுமல் போயினர். விடுதலைப் போராளிகளாகப் பயிற்சி பெறப் போய்விட்டதாகச் சக நண்பர்கள் கூறினுர்கள்...

அவர்கள் எத்தனை புண்ணியம் செய்தவர்கள்? இப்படி என்னைப்போல் நரக வாழ்வை அனுபவிக்காமல் அடிமை விலங்கை ஒடிப்பதற்காகப் புறப்பட்டு விட்டார்கள்....

நானும் அப்படிப் போகமுடியாதா?

இந்த அடிமை வாழ்விலிருந்து எனக்கு விடுதலை கிடையாதா?

சந்தர்ப்பங்கள் எனக்கு எதிரியாக இருந்தன நேரத்துக்குப் பாடசாலை செல்ல வேண்டும். ...திரும்பி வரும் போதும் கட்டுப்பாடு... மாலை வேளையில் ரியூசன்...சனி ஞாயிறுகளிலும் வீட்டில் படிப்பு...

எவ்வளவு சுமைகளையும் ஒருவனுல் சுமக்கமுடியும். ஆனுல், மனச்சுமையை எப்படிச் சுமப்பது?

எண்ணங்களும், ஏக்கங்களும் இலட்சியங்களும் நான்கு சுவர்களுக்குள் அமுங்கிவிட வேண்டியவைதானு?

நான் ஏ. எல். லுக்குள் காலடி எடுத்து வைத்தபோது யாழ். குடாநாட்டிலும், ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் தினம் தினம் விமானக் குண்டு வீச்சினுலும், சுற்றி வளைப்பினுலும், இறக்கும் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது...

'ஷெல்'லடி கேட்டால் பதுங்கு குழியில் போய்விடும்படி அப்புவின் கட்டளை. நான்' அண்ணன் ரமேஷ், தங்கை புஷ்பா, அம்மா அனைவரும் பதுங்கு குழிக்குள் இருப்போம்...

குண்டுவீச்சும், 'ஹெலிச்' சூடும் எப்படி நடக்கின்றன? என்று பார்க்க வேண்டும்... அதில், காயப்பட்டவர்களைத் தூக்கி அம்புலன்சில் ஏற்றி உடனுக்குடன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும்... இரத்தம் தேவைப்படுவோருக்கு என்னுல் முடிந்தளவு இரத்தம் கொடுக்கவேண்டும். போராளிகள் இராணுவத்துடன் வீரமுடன் மோதுவதைக் காண வேண்டும்... அதில் என்னுடன் படித்தவர்களும் இருக்கிறுர்களா? என்று அறியவேண்டும்...

வீரமுடன் எதிர்த்துச் சண்டையிடும் நமது தமிழ்த் தியாகிகள் களைக்கும் வேளைகளில் தாகம் தீர்க்கக் குளிர்பானமாவது அவர்களுக்கு வழங்க வேண்டும்...

'சென்றி' களில் இரவு பகலாகக் கண்விழித்து நமது மக்களைக் காத்து, தம் உயிரை அர்ப்பணிக்கும் அவர்களுக்கு எவ்வாறு கைமாறு செய்யப் போகிறது தமிழ் இனம்?

என் அப்புவைப்போல் நூற்றுக்கணக்கான 'அப்பு' கள் நமது மண்ணில் இருக்கும் வரை நமக்கு விடிவு கிடைக்குமா...?

இப்படியான சிந்தனைகளில் இரவிரவாக என் மனம் அலைமோதும்...விழிகள் சிவக்கும்...

இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு கோட்டைச் 'ஷெல்' அடிகள் நடக்கும் போது உள்ளம் குமுறும்... கொதிக்கும்...

இரவிரவாக அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அடிக்கப்படும் (சிங்கள) இராணுவத்தின் ஷெல்களால், எத்தனை தமிழ் உயிர்கள் எமலோகம் சென்றனவோ? எத்தனை இளம் தளிர்கள் கை, கால்களை இழந்தனவோ? எத்தனை வீடுகள் தரைமட்டமாகினவோ?

இவைகளுக்கெல்லாம்முடிவே கிடையாதா?

எப்படிக் கிடைக்கும்?

சில மாதங்களுக்கு முன் ஆயுதப் போராட்டத்துக்கு நிதி தேவையென்று போராளி இயக்க உறுப்பினர்கள் வீடு வீடாகப் பவுணும், பணமும் சேகரித்துக் கொண்டு வந்த போது. பக்கத்து வீட்டு லோகநாதனின் அம்மா தன் காதில் கிடந்த குச்சுக்களைக் கழற்றிக் கொடுத்த போது என் கண்கள் கலங்கி விட்டன...

புருஷனை இழந்து ஐந்து வருடங்களாக அந்த அம்மா தன் நான்கு பிள்ளைகளை வளர்க்கப் படும் பாடு எனக்குத்தான் தெரியும்.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள சில கடைகளுக்கு இடியப்பம் அவித்துக் கொடுப்பதும்....

கலியாணவீடு, செத்த வீடு என்று அழைப்பு வரும்போதெல்லாம் மாடாக நின்று பாடுபட்டு சிறுகச் சிறுகச் சேர்த்து வைத்து ஒருவேளை உண்டு, மறுவேளை பட்டினி கிடந்து லோகநாதனையும், உமா அக்காவையும் படிப்பிக்கிறுள்...

அப்படிப்பட்ட ஒரு ஏழைத் தாய், தன் காதுகளில் கிடந்த ஒரேயொரு பவுண்துண்டை, மண்ணின் விடுதலைக்காக கழற்றி மலர்ந்த முகத்துடன் கொடுத்த அந்தக் காட்சி... நினைவில் என்றும் அழியாதது.

அதேவேளை...

என் அப்பு' செய்ததை நினைக்க அருவருப்பாக இருக்கிறது.

''எட ரமேஸ்— பொடியள் வாருங்கள்... கெதியாப்போட்டோவையெல்லாம் ஏறிக் கழட்டி ஒளியுங்கோ... எடியே! பூரணம் இங்க கெதியா வாவன்.... சனியன் கழுத்து நிறையப் பூட்டிக் கொண்டு நிற்கிறுய்... கழட்டி வையடி எல்லாத்தையும்... டேய்பொடியள்... நீங்கள் வீட்டுக்க போங்கோடா...''

அப்பு இயந்திரமாகச் சுழல்கிறுர்...

''அண்ண, வீட்டில ஆர்இருக்கிறது?''

''ஓம் தம்பி... நான்தான்... வாருங்கோ''

''இல்லயண்ண! நாங்கள்வந்த விசயம் உங்களுக்குத் தெரியுமெண்டு நினைக்கிறம்...''

''எனக்கு என்னெண்டு தம்பி தெரியும்... நீங்கள் சொல்லாமல்...''

''ஆயுதம் வாங்க பவுண் சேர்க்கிறம்... உங்களால முடிஞ்சளவு . நீங்களும் தந்தால் நல்லது...''

''எட அப்பிடியே விசயம்...? எடி பூரணம்... பூரணம்... உங்கை என்ன செய்யிறுய்...? கெதியா... வா...''

சில நொடிகளின் அமைதிக்குப் பின்...

''தம்பி நீங்களே .. பாருங்கோ...உவளின்ர கழுத்தில காதில ஏதும் கிடக்கோ எண்டு... நானும் பென்சனுகி பல வரிசமாச்சு... எடுக்கிற காசு சாப்பாட்டுக்கே போதாமலிருக்கையிக்கை நகை நட்டு வாங்க ஆரிட்டப் போறது?''

''அப்ப காசெண்டாலும் உதவி செய்யுங்கோ அண்ண... நாட்டுக்காக உங்கட பங்கும் இருக்கவேணும்...''

''இப்ப சரியான கஷ்ரமான நேரம் தம்பி... எண்டாலும் படியேறி வந்திட்டியள்... இந்

(10ஆம் பக்கம் பார்க்க)

24-5-1987 தொடக்கம் 30-5-1987 வரை

## இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**மேடம்:** நன்மை தேடி வரும், நல்லோர்உதவி உண்டு, செய்தொழிலில் விருத்தி காண்பீர், நாடுவிட்டுப் போனவர் வீடு வந்து சேர்வர், சகோதரரின் உதவியும் ஆபரணச் சிறப்பும் விருந்து உபசாரமும் உண்டாம்.

**இடபம்:** செய் தொழிலால்கவலையும், காதலரிடையே மனக்கசப்பும், கொடுக்கல் வாங்கலிலே பிணக்கும், பெண்களால் சுகமும், பிதாவழியால் உதவியும், பொருள் நட்டமும், இனப் பகையும் உண்டாம்.

**மிதுனம்:** தூரப்பிரயாணம், பிரிந்தவர் ஒன்று சேர்வர், மாதுரு வழியால் பணமும், ஆயுதபயமும், சகோதரர் ஒருவரால் கவலையும், நண்பர்களால் கெடுதலும், அதிக யோசனையும், அலைச்சலும் ஏற்படும்.

**கடகம்:** வீண் விரயம், மனக்கிலேசம், கொடுக்கல் வாங்கல் கஷ்டம், கோட்டு விவகாரம், பெரியோர் பகை, உடல் நலக்குறைவும், பணச் செலவும், வாகன நட்டமும் உண்டாம்.

**சிங்கம்:** மிதமானலாபம் கிடைக்கும், புதுத்தொழிலால் முன்னேற்றம், பெரியோரின் நல்லாசி, பூமியால் அதிக வருமானம், மூத்த சகோதர வழியால் நன்மை, வாகனயோகம், மாதாவழிச் சிறப்பும் உண்டு.

**கன்னி:** இலட்சுமி கடாட்சம், எதிர்பாராத வருமானம், இருதொழிலால் லாபம், சகல காரியங்களிலும் வெற்றி, புத்திரர்களால்புகழ், புண்ணிய வழிகளில் நாட்டம், மாமன் வழியால் கவலை, தனதானிய விருத்தி

**துலாம்:** அரச ஆயுத பயம், வாக்குக்கலகம் வீண் பழிகேட்டல், சத்துரு பீடை, சரீரசுகக்குறைவு, காரியக்கேடு, வருவாய்த்தடை, நல்லோர் நட்பு, வீட்டில் ஆதரவு, மாமன் வழிஉதவி.

**விருச்சிகம்:** புகழ்பெருகும், புதுத்தொழிலால் முன்னேற்றம், புத்திரர்க்கு நன்மை, மாங்கல்யவிருத்தி, கணவன் மனைவியரிடையே மகிழ்ச்சி, வருவாய் அதிகரிப்பு, பிரிந்தவர் ஒன்று சேர்வர், தூரத்து உறவு.

**தனுசு:** வெற்றி வாகை சூடுவீர், பெரியோரின் நல்லாசி, நல்லறிஞர் ஆதரவு, கல்வியாளர் கௌரவம் பெறுவர், தொழில் தடைகள் நீங்கும், கவலைகள் தீரும், நீண்டநாள் நோய் குணமாகும்.

**மகரம்:** மாதா வழியால் கவலை, கொடுத்தும் குறை கேட்பீர், விவாகத்தடை, செய்தொழிலில் மந்தம், அஜீரணக் கோளாறு, இனசனப் பகை, தூரத்துப் பயணம் துயரம் தரும்.

**கும்பம்:** புத்திரரால் புகழ் பெறுவீர், புதுமனைச் சேர்க்கை உண்டு, நினைத்தகாரியம் கைகூடும், எதிர்பாராத பணவரவு, பிரயாணம் நன்மை தரும், பதவி உயர்வு, கல்விமான்கள் கௌரவம்.

**மீனம்:** மன விசாரம், வாகனுதிகளால் நஷ்டம், பூமியால் அதிகலாபம், புத்திரர் ஒருவர் நன்மையடைவர், தூரத்துச் செய்தியால்துயரம், நண்பரால் உதவி, உடல் நலக்கேடு, வைத்தியச்செலவு.

# அன்று மனுநீதி கண்ட அரசன் இன்று மனுநீதி கொன்ற அசுரன்

# அருமந்த அரசாட்சி

அருட்கவி
நாக. பரமசாமி

இடம் - திருவாரூர்த் திருநகர். வேத ஓசையும் வீணையின் ஓசையும் சோதிவானவர் தோத்திர ஓசையும் நிறைந்துள்ள திருநகரம். அந்நகரைத் தலைநகராக்கி அரசு வீற்றிருக்கிறான் நீதிக்கும் கருணைக்கும் பெயர்பெற்ற பெருமன்னன் ஒருவன். அரண்மனையைச் சுற்றிப் பெரியதோர் அரசுலாந் தெரு. அரசன் உலா வருவது அவ்வீதியிற்றான்! அவ்வீதி வேறொரு வகையிலும் பெயர் பெற்றது. பன்றியாகவும் அன்னமாகவும் உருமாறி, செருக்கொடு அடிமுடி தேடிய இருவர் செருக்கையும் அடக்கிய பெருமான், தமது தொண்டருக்காகத் தூது நடந்த வீதி அந்த வீதி! அதனால் பெருமானின் செந்தாமரைப் பாதங்களின் சுகந்தம், அவ்வீதியெல்லாம் நாறுகின்றது.

''படர்ந்த பேரொளிப்
பன்மணி வீதி,பார்
இடந்த ஏனமும் அன்னமும்
தேடுவார்
தொடர்ந்து கொண்டவன்
தொண்டர்க்குத் தூது
போய்
நடந்த செந்தா மரையடி
நாறுமால்''

என்று சாட்சி சொல்கிறார் தெய்வப் புலமைச் சேக்கிழார் சுவாமிகள்.

இவ்வீதியிலே, ஒரு நாள், நெஞ்சையுருக்கி, உயிரை வருத்தும் சம்பவம் ஒன்று நிகழ்கிறது. அரசிளங்குமரன்,-தவமுயன்றரிதிற் பெற்ற தனியிளங்குமரன் - சிவமுயன்றடையும் சீர்மை நிறைந்த செல்வன்-இளவரசுப்பட்டஞ் சூட அண்மித்துக் கொண்டிருக்கும் பருவத்தினன், தேர்மீது தன் பரிவாரங்கள் சூழச் சென்று கொண்டிருக்கிறான். திடீரென்று, நல் ஆன்புனிற்றிளங் கன்று ஒன்று துள்ளிப்பாய்ந்து அத்தேர்க்காலுள் அகப்பட்டு இறந்துவிட்டது. அந்தோ! கண் மூடி விழிக்க முன்னர் நிகழ்ந்துவிட்ட கொடுமையிது. யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ இயலாதவாறு நிகழ்ந்துவிட்ட தற்செயல் நிகழ்ச்சி இது. (தத்-சிவம்-இறைவன்)

நிலையை உணர்ந்தான் மைந்தன். ''வந்த திங்கபாயம்'' என்று உரைதடுமாறி, நெஞ்சில் துயருழந்து அறிவழிந்தான். ''நிதியை நீட்டி நீதி செய்யும் கருணைக்கடலான, எந்தையாய கோமானுக்கு, உலகிற் பெரும்பழி வந்தெய்தப் பிறந்தேனே பாவி'' என்று கலங்கி அறிவு சோர்ந்தான். அவன் தந்தை வழி மைந்தன்!

''வந்த இப்பழியை மாற்றும் வகையினை, மறை நூல் வாய்மை அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவது அறமேயாகில், என் தந்தை இதனையறிய முன்னர் அதனைச் செய்வேன்'' என்று தீர்மானித்துத் தெய்வ மறையவரிடம் சென்றான் மைந்தன்.

இதே வேளை தன்னுயிர்க் கன்றையிழந்த பசு, தரியாதாகி முகத்தில் கண்ணீர் வாரச்சென்று, மன்னுயிர் காக்கும் செங்கோல் மன்னனின் பொற்கோயிலிலே பொருத்தப் பெற்றிருந்தபொன்னணி மணியைக் கொம்பினால் இழுத்துப் புடைத்தது. எக்காலமும் அடிக்கப்படாத அவ்வாராய்ச்சி மணி இப்போது அடிக்கப்படுகிறது. அது எவ்வாறிருந்தது என்பதைச் சேக்கிழார் பெருமான் தெய்வத்தமிழிலே தருகிறேன்.

''பழிப்பறை முழக்கோ,
ஆர்க்கும் பாவத்தின்
ஒலியோ, வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி
கொளவரும்மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்
போ என்னத் தன் கடை
முன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்
னன் செவிப்புலம் புக்க
போது.''

இம்மணியொலி, எவ்வகையிலும் பேராபத்தைத் தரத்தக்க ஒலியாகவே மன்னன் செவிகளில் வீழ்கிறது. பழி, பாவங்களின் முழக்கமாய், மாண தேவனின் ஊர்தியான எருமைக் கடாவின் சுழுத்து மணி ஒலியாய் மன்னனுக்குத் தோன்றுவதால், ஆச்சரிய வசத்தனாய், காவலரை நோக்குகிறான்.

''ஈங்கிதோர் பசுவந்தெய்தி, இறைவ! நின் கொற்றவாயில் தூங்கிய மணியைக் கொம்பினால் அடித்தது'' என்றனர் காவலர்.

அமைச்சனை இகழ்ச்சியுடன் பார்த்த அரசன், ''இதற்கு என்னுற்றது?'' என்றான்.

''வளவ நின்புதல்வன் ஆங்
கோர்மணிநெடுந்தேர்
மேலேறி
அளவில் தேர்த்தானை சூழ
அரசுலாந் தெருவிற்
போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்
கால் இடைப்புகுந்
திறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்ததித் தன்மை''

என்றான் அமைச்சன்.

பென்னம் பெரியதேர். அத்தேர்ச் சில்லுக்குள் சிறிய ஒரு கன்றுக்குட்டி அகப்படுவதை இலகுவில் தவிர்க்க முடியாது. ஏராளமான தேர்த்தானை சூழ அவ்வுலா நிகழ்ந்தபடியால்,— தேர்ப்படையினர் அனைவரையும் தாண்டி இம் மரணம் நிகழ்ந்துள்ளமையால்,— அதற்கு இளவரசர் பொறுப்பாக மாட்டார். அரசுலாந்தெருவில் பசுவுக்கும் கன்றுக்கும் என்ன வேலை? ஆனாலும் மரணித்த கன்றோ மிகவும் சிறிய கன்று! இளங்கன்று பயமறியாதல்லவா? எங்கோ நின்ற கன்று திடுமெனத் துள்ளித் தேர்க் காலுள் வீழ்ந்திருக்க வேண்டும். இளவரசரில் குற்றமேதும் இல்லை. இவ்வாறாக, அமைச்சன் பசுக்கன்றின் மரணத்தைநியாயப்படுத்துகிறான்.

இதனைக் கேட்ட வேந்தன் விடந்தலைக் கேறியவன்ஆனான். 'செவ்விதென் செங்கோல்'' என்று இரங்கி ஏங்கினான். பசுவைப் பார்த்தான் அது படும் பாட்டை அவனால் சகிக்க முடியவில்லை.

அரசன் உற்ற துயரத்துக்கோர் அளவில்லை. மந்திரிகள் அது கண்டுஅஞ்சிப் பெருவணக்கத்துடன் குறிப்பிட்டார்கள்:

''அரசே! பசுவதை செய்தவர்க்குமறைவல்லார்விதித்த முறை வழிநிறுத்தல் அறம்''

''சபாஷ்! நல்லநீதி சொன்னீர்கள்! என்மகனுக்குப் பிராயச் சித்தம் தேடுவதால், கன்றையிழந்த இப்பசுவின் துயரம் தீர்ந்திடுமோ? எனக்குரியான் ஒரே மகன். அவனை இழப்பதே நீதி! அத்தாய்ப் பசுவின் துயரத்தை நானும் எய்துவதே நியாயம். இல்லையெனில் தருமமே சலித்துவிடாதோ?'' அரசன் சீறுகிறான்

இக்கட்டுரையின் உயிரான இடம் இனித்தான் வருகிறது. அரசன், அரசர்க்குரிய அறத்தைச் சொல்கிறான்.

''மானிலங் காவலன்
ஆவான் மன்னுயிர் காக்குங்
காலைத்
தானதனுக் கிடையூறு தன்
னால், தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்
தால், கள்வரால்உயிர் தம்
மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்து
அறங்காப்பான் அல்லனோ''

பழைய காலத்தரசர் யாவரும் மன்னுயிர்களைக் காத்தனர். இவ்வுயிர்களை 'சென்று நின்று வாழ் உயிர்கள்' என்பான் கம்பன். ஆடு மாடுகளைக் கூட, உணவுக்காகக் கொன்று தின்னலாம் என்று இறைச்சி விலையையும் நிர்ணயித்துள்ளன தற்போதைய அரசுகள். எனவே, தற்காலத்து, மன்னுயிர்கள் என்று ஒன்றில்லை. மனித உயிர்களுக்கே அரசு என்றாய் விட்டது. அது கூட எப்படி நிகழ்கிறது?

குடிமக்களுக்குஐந்துபயங்கள் உண்டாவன, (1) அரசனால் உண்டாவன, (2) அரசனின் சேனை வீரரால் உண்டாவன, (3) (உள்நாட்டு - பிறநாட்டு) பகைவர்களால் உண்டாவன, (4) கள்வரால் உண்டாவன, (5)ஏனைய விலங்கு முதலிய உயிர்களால் உண்டாவன.

இவ்வைந்து பயங்களையும் போக்கி, அறத்தைக் காப்பவன்தானே அரசனுவான் என்று கூறிய அவ்வரசன் என்ன செய்தான்?

''ஒரு மைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான் தருமந்தன் வழிச் செல்கை கடனென்று தன் மைந்தன் மருமந்தன் தேராழி உர ஊர்ந்தான் மனுவேந்தன் அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்''

என்று இம் மாமன்னனின் அருமந்த அரசாட்சியைச் சொல்லி வாயூறுகிறார் சேக்கிழார் சுவாமிகள்.

இங்கே என்ன நிலை? தமிழராய நம் நிலை என்ன? ஆனபயம் ஐந்தும் நமக்குண்டா இல்லையா?

ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய இருவர்;

ஒருவர்; மனுநீதி கண்ட சோழன் — அரசன்

மற்றவர்:...... ...... அசுரன்.

## அன்னையின் கருப்பை

அன்னையின் கருப்பை
அரணில் விளைந்த உயிர்
அன்னை பூமிக்குழிக்குள்ளே
அழிவில் பிழைக்கிறது

அன்னை பூமியே
நீ வெறும் மண்ணல்ல;
இது வெறும் பதுங்கு குழியு
மல்ல
அன்னை பூமியின் கருப்பை!

என்னை நாளைக்கும்
ஆளுமையைக் கேட்டதற்கு
சின்ன மனிதர்
செய்சிறுமை ஷெல்
பொம்பர்......

என்ன கருணை!
அம்மா நீ காத்தாய்
பதுங்குதல்
பாயதற்காம் படிமுறையா
கட்டும்
கழுகுகளை வீழ்த்தும்
கலை கை கூடட்டும்
காத்தருள்வாள் அன்னைபூமி

★ சண்முகபாரதி

# புதுக்கவிதையின் வளர்ச்சியை அலட்சியப்படுத்த முடியாது

●சிங்கையாழியான்

சிருஷ்டி கர்த்தாக்கள் தமது எழுதுகோலை வெகுஜாக்கிரதையாகப் பாவிக்க வேண்டும். இன்று விஞ்ஞானம் தந்த ஏவுகணை எட்டினமட்டுந்தான் பாயும். எட்டாததூரமெல்லாஞ் சென்று, எல்லாரையுமூடுருவிப் பாய்கின்ற பேனை என்னும் ஏவுகணையைப் பாவிப்பதில் சாவதானமும் நேசக்கரமும் வேண்டும். ஒழுக்கம் மக்களுக்கு உயிராய் இருப்பதுபோல மக்கள் கவிக்கும் வரம்புண்டு. மக்களுடைய வாழ்வு எல்லையைத்தாண்டினால் மற்றவர்களால் மதிக்கப்படமாட்டார்கள். அஃதேபோலக் கவியும் வரம்பு கடந்தாற் குற்றமாகும். ஓசைதருமின்பம் உவமையிலா இன்பமென்பதை மறந்துவிடல்பொருத்தமன்று. மாத்திரையால் இசைவளரும்; அவ்விசையால் நாக்கு லாவகமாக இயங்கும். தானகவே செய்யுள் நாமேல் நடக்கும். ஒரு மாத்திரை தப்பினால் ஓசை கெடும் அதனாற் பாட்டு உருமாற்றமடையும் என்கின்றார் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்.

''எட்டினமட்டும்பாயும்
ஏவுகணை இவ்வுலகில்
எட்டாத தூரமெல்லாம்
ஏகியே— பட்டுருவிப்
பாயும் எழுதுகோல் பாவிப்
போம் நாமதனை
நேசகக்கரம்பிடித்துநின்று''

''மக்கள் நடைக்கு
வரம்புண்டதுபோல
மக்கள் கவிக்கும் வரம்புண்டு
—மக்கள்
வரம்பு கடந்தால் மதியார்
கவியும்
வரம்பு கடந்தால் வழு''

''மாத்திரையில் நின்றும்
வளருமிசை அவ்விசையால்
நாத்திருந்தும் செய்யுள்
நடக்கும்— சாற்றின்
ஒருமாத்திரைதப்பின் ஓசை
கெடும் பாட்டும்
உருமாற்றம் பெற்றொழி
யும்''

எவ்வாறு வாழ்க்கையில் ஒழுக்கம் விழுமியதோ அவ்வாறேதான் கவிநடைக்குமோர் சட்டம் உண்டு. தண்ணென்றொழுக்கமும் தழுவி என்பர் கம்பர். அதை மீறின் மற்றவர்களால் மதிக்கப்படமாட்டாது என்பது புலவர் கருத்து. அவர் இளங்கவிஞர்களுக்குக் கூறுவது வரவேற்கத்தக்கதும் சத்யதர்சன முடையதுமாம். ''இளங்கவிஞர்களுக்கு ஒன்று சொல்லுகின்றேன். கவி இயற்கை; கல்வியறிவாலதை வளம்படுத்திக் கொள்ளுங்கள். வளம்பெறாத கவியூற்று வற்றிப்போம்; அது வாழாது. மாத்திரை அத்திவாரம்; மாத்திரை கூடினாலும் குறைந்தாலும் இசைகெடும். பாட்டின் உருவம் கெடும்''

— (உள்ளதும் நல்லதும்)

புதுக்கவிதைகளின் அண்மைக்காலவளர்ச்சியையும் அலட்சியப்படுத்தமுடியாது அதே வேளையில் மரபுக்கவிதையினையோ கர்த்தாக்களையோ வெறுப்பதும்காழ்ப்புடன்பழகுவதும பொருத்தமன்று துறையறிவுடையோர் புலவர் கவிவலவரும் 'கூட இசைப்பாட்டியற்றுபவர் பாவலர் கிருதிகளையாக்கி இசைகாண்போர் வாக்கேயக்காரர். பாப்புனைவோர் கவிஞர். வாழ்வின் வெளித் தோற்றங்களிற் காணப்படும் அவலங்களையும், துயரங்களையுஞ் சித்திரிக்கும் இயல்பைப் புதுக் கவிதைகளிற் சந்திக்கிறோம். உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அம்சங்களும் பகுத்தறிவை கால்கோளாகக் கொண்ட அம்சங்களும் அங்கே ஊடும் பாவும் போலமைகின்றன. எதிலும் சமகால உணர்ச்சிகள் — பிரதிபலிப்பைத் தள்ளி விட முடியாது. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் உணர்ச்சியே உரை கல்லாகின்றது. உதாரணமாக அன்பும் அழகும் புத்திபூர்வமான காரணங்களால் நிலைநாட்ட முடியாதவை. ஆனால் இதயத்தாற் காரணம் காட்ட முடியும். எந்த வழியிற் சென்றால் இதயம் நிறைவு காண்கிறதோ அந்த வழிக்கு அநுகூலமான எதுவும் ஏற்று அனுசரிக்கப்பட வேண்டியது என்பதுதான் இதயம் காட்டும் காரணம்.

அதாவது அனுபவபூர்வமாகப் பெறும் ஆனந்தமே இதயம் காட்டும் காரணம். இதயத்துக்கெனக் காரணங்கள் உண்டு. அது அறிவுக்கெட்டாது என்று பாஸ்கல் கூறுகிறார். இத்தகைய அனுபவத்துக்கு வழிகோலுவதுதான் உணர்ச்சி. உணர்ச்சி என்னும் போது- அதன் சக்தியை நாம் உணர்ந்து- அதாவது அனுபவித்துப் பார்க்கிறோம். ஆனால் எல்லா மனக்கிளர்ச்சியையும் உணர்ச்சியென எண்ணி விடுகிறோம். அனுபவத்தைக் காரணமாகக்கொண்டு இதயநிறைவில் முடியும் உணர்ச்சியையும் இவ்விதமே இதயநிறைவுக்குப் பயன்படாமல் எழும் அற்பமான உள்ளக்கிளர்ச்சியையும் ஒன்றுஎன்றே எண்ணிவிடுகிறோம் பகுத்தறிவுக்குட்பட்ட விஷயங்களிலும் கிளர்ச்சிக்கு முதலிடம்கொடுத்துவிடுகிறோம் என்று இன்னோர் சிந்தனையாளர் பேசுகிறார். வெறுஞ் சுலோகங்கள் உணர்ச்சிதரினும்அவை பாட்டாவதில்லை. வண்ணமும் வடிவமும் சபதநாதமும் கவிதையின் உயிர்நாடிகள்.

பொதுவான இலக்கியக் கோட்பாடுகளையும், சட்டகங்களையும் தாண்டி, வளமான சிருஷ்டிகர்த்தா தன் கருவை முன்வைக்கும்போது-ஒருஒழுங்குக்குட்படுகிறான். தெருவீதிக்கான வீதியொழுங்குமுண்டு. தமிழிலே நெடுங்கால வரலாறுகொண்ட கவிமரபு பேணப்படவும் வேண்டும். புதுமைக்கு வரவேற்புமுண்டு. எது எப்படியாயினும் தமிழ்மொழியின் உறுதியான கட்டுக்கோப்பும் வளமும்- பல்துறைகளிலும் கொடிவிட்டுப் படரும்மிவ்வேளையில், கவிஞர்களின் ஆற்றலுமறிவும்-உணர்வும், திறனும் நல்ல பகைப்புலத்தில் வளர்க்கப்படவும் வேண்டும். நிலையான ஓரிடத்தைப் பெற்றிருக்கும் கவிதைச்செல்வம் வெறுமனேமலினப்படாமல்- சத்தியவேட்கையோடு என்றும் நிலைபெற்று வாழக்கூடிய நெறியில் வளம் பெற்று மலர்ந்து மணம்சுவற வேண்டும். அன்றேலவை கால வெள்ளத்தாலடிபடாதிருக்க முடியாது கவிதை முக்கியம் பெறும்போது கவிஞர் முதலிடம் பெறுவதிற் சந்தேகமில்லை.

# அரங்கு

ஏ.ரீ. பொன்னுத்துரை

## உலகை வலம் வந்த 'தனி நடிப்பு' மன்னன்

'ONE MAN THEATRE' என்ற பெயரில் உலகின் பல நாடுகளுக்கும் சென்று தனி நடிப்பு மூலம் சுவைஞர்களை ஈர்த்து நிற்பவர் பிரியன் டீ பார்ன்ஸ் (BRIAN D BARNES). இவர் இரு தடவை ஈழத்துக்கும் வந்துள்ளார். தலைசிறந்த நடிகராக மிளிரும் இவர் தனது தனித்துவ ஆற்றலை 'தனி நடிப்பு' துறையில் பாய்ச்சி அதற்குத் தனி வேகம் கொடுத்தார். பல முறை உலகை வலம் வந்தார். ஐரோப்பிய நாடுகளின் பெரு நகரங்கள் முதல் உஷ்ண வலயத்துப் பட்டினங்கள் ஈறாக நோர்வேயின் வட பகுதி முதல் பிஜி (Fiji) போன்ற இடங்கள் வரை பல தேசத்து அரங்குகளில் தனி நடிப்பின் தன்மையைக் காட்டினார். இவரது ஆற்றல்களை பல்வேறு இரசிகர் குழுக்கள் நயந்தன. ஆங்கில மூல இலக்கியங்களில் தனி விருப்புடைய மக்கள், இடைநிலைப் பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழகத்தார் என பலவிதத்தினர் இவரை விதந்தனர். ஒஸ்காவைல்டின் ஆக்கம் பழைய புதிய கதைகள், ஒரு வள்ளத்தில் மூன்று மாந்தர் என்பவை இவரது தனி நடிப்பில் இடம்பெறும் சில முக்கிய கோர்வைகள். தியேட்டர் வரலாற்றில் ஒரு முழு அறிவுடைய அறிஞனாகவும் திகழ்கிறார். நமது நடிகர்கள் பலர் நடிப்பதன்றி, நமது நாடக வரலாற்றை அறிய, புதியன புகுத்த முனைவதில்லை.

## தனி நடிப்புத்துறையில் நமது கலைஞர்கள்

முப்பதுகள், நாற்பதுகளில் இடம் பெற்ற நாடகங்களில் பபூன் செல்லையா புகழ் பூத்து நின்ற பெரும் நடிகர். என். எஸ். கிருஷ்ணனை விட விசேட ஆற்றல் படைத்தவரென சானா ஈழகேசரியில் எழுதியுள்ளார். கோமாளிகளாக கொட்டகைக் கூத்தில் நடித்த சிலர் சிலவேளை சில காட்சிகளில் தனி நடிப்பின் கோலம் காட்டுவதுண்டு. நகைச்சுவையை கொட்டுவதாக மட்டும் இவர்களது நடிப்பு அமைந்தது. 108 வியாதியாளனாக மேடையில் தோன்றி கலையரசு கே. சொர்ணலிங்கம் அவர்கள் தனிநடிப்புக்கு மெருகூட்டினார். பலவித நோய்த்தன்மைகளை குரலால், நடிப்பால், தவிப்பால் அவர் காட்டிய விதம் தனித்துவமானது. இலங்கையர்கோன் எழுதிய 'லண்டன் கந்தையா'வில் வரும் ஆங்கில கதாப்பிரசங்கப் பகுதியை பல மேடைகளில் தனி நடிப்பாக சானா முன்வைத்தார். அக்காலகட்டத்தில் வரவேற்பிருந்தது. 'ராஜ்' நகைச்சுவை நாடகமன்ற இயக்குநர் 'சக்கடத்தார்' இராஜரட்ணம் 'வீதியோரங்களில் தைலப்புட்டிகள் விற்பவர்' வேடத்தில் இயற்கை இழையோடத் தனி நடிப்பு செய்தவர். 'சக்கடத்தார்' நாடகத்து சில பகுதிகளையும் தனி நடிப்பாக காட்டியவர். இத்துறையை மேலும் உயர்த்தி தனி மெருகு கொடுத்த பெருமைக்குரியவர் திரு. கே. எஸ். பாலச்சந்திரன் அவர்கள் 'அண்ணை றைற்' என்ற தனி நடிப்பை 1973 முதல் இது வரை 500 தடவைகளுக்கு மேலாக கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும் காட்டியுள்ளார். பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யும் மக்களின் மனோநிலைகளை, போக்குகளை கிண்டல் செய்வதாக அமைத்த 'அண்ணை றைற்' உண்மையில் மதிநுட்பம் வாய்ந்த ஆக்கம். மக்களின் வாழ்வு மாற்றத்துக்கு தக சம்பவங்களையும் பகிடிகளையும் தனக்கே உரிய தனிப் பாணியில் மாற்றி மாற்றி அமைத்தமையே 15 ஆண்டுகளாக இது தொடர்ந்து நிகழ்வதற்கு காரணமெனலாம். 'ஆஸ்பத்திரி ஓடலி,' 'தியேட்டரில் ரிக்கற் கொலெக்டர்' வேடங்களிலும் தனி நடிப்பை பல நூறு தடவைகள் நடித்துள்ளார். இன்று இளம் சமுதாயம் இத்துறையில் ஆர்வம் காட்டுகிறது. காலத்தோடு ஒட்டிய கருத்துக்களையும் பாய்ச்சுகிறது.

## 'நடிப்புக் கலை' வளர்க்க தனிநடிப்பு இலகு உத்தி

பள்ளிகளிலும், கிராமங்களிலும் தனி நடிப்பு போட்டிகள் அமைத்தால் நடிப்புத்துறையில் நல்ல அறுவடை பெறமுடியும். நடிக்க வேண்டும் என்ற துடிப்புடன் இயங்கும் மாணவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கும். ஓரிருவர் சேர்ந்துவந்தே செலவின்றிப் போட்டிகளில் பங்கு பற்றவும் முடியும். போட்டிக்கு வருவோர் தொகையும் இந்த வசதிகள் காரணமாகப் பெருக்கலாம். பணப் பரிசுகளைத் தாராளமாக வழங்கும் முறையும் வந்து விட்டால் தானாகவே நடிப்புக் கலை வளரும். ஆனால் ஒன்று தனிநடிப்பு பிரதி இலக்கியத் தன்மை மிக்கதாய் அமைய வேண்டும். வெறும் நகைச்சுவை வேண்டாம்.

# இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

சச்சிமாஸ்டர்

பழமொழிகள் வெளிப்படையாக ஒரு கருத்தைத் தந்தாலும் ஆழ்ந்து சிந்திப்பவர்கட்கு மிக விரிவாக மனித சமுதாயத்தை சாடிநிற்கும் பரந்த கருத்துக்களைக் கொண்டிருப்பதை உற்று உணரக்கூடியதாகவிருக்கின்றன.

''உழுகிற மாடென்றால் உள்ளூரிலே உழாதா?'' ''உழுகிற மாடென்றால் உள்ளூரிலே விலைப்படாதா?'' இந்த இரண்டு பழமொழிகளும் ஒரே மாதிரியாக அமைப்புப் பெற்று முடிவில் மாத்திரம் உழாதா? விலைப்படாதா? என்ற முடிவுகளைக் கொண்டிருக்கின்றன.

உழவு, செயல், விலை, செயற்திறன், உடற்தோற்றம், குணம், வயது, நிறம் என்பனவற்றைக் கொண்டு மதிப்பிடப்படுவது.

உழுகிற மாடு வேலை செய்யும் திறன் உடையதாகவிருந்தால் உள்ளூரிலேயே போதியளவு வேலை கிடைக்கும். அவ்வாறே உழக்கூடிய திறன் படைத்த அங்கலட்சணம் உடைய மாடு ஒன்று விலைப்படவிருந்தால், உள்ளூரிலேயே நல்ல விலை கொடுத்து வாங்கப் பலர் போட்டி போட்டு முன்வருவர். அல்லாத மாட்டுக்கு அதன் திறமை அறியாத அயலூரிலேயே வேலைகொள்ளவோ, விலைப்படுத்தவோ வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும்

## பழமொழிக் கதை

இந்த நிலைமை மாட்டுக்கு மட்டுமல்ல, உயிருள்ள மற்றைய வீட்டு மிருகங்களுக்கும், கல்யாணச் சந்தையில் விலை கூறப்படுகின்ற வாலிபர்களுக்கும். கன்னிப் பெண்களுக்கும் மிகப் பொருத்தமுடையதாகும்.

பெண் ஒருத்தி கல்யாண வயது அடைந்ததும், அவளின் குண நடை தெரிந்தவர்கள், எந்தவித ஆஸ்திபாஸ்திகளையும் எதிர்பாராமல், அவளைத் தம் வீட்டு மணப்பெண்ணாக்க முன்வருவர். அவ்வாறே சில வாலிபர்களின் இல்லற பிணைப்புக்களும் நிறைவேறுகின்றன. ஆனால் சிலர் தமது ஆண் மக்களின் திருமணங்களின் மூலமே தமது குடும்ப பாரங்களையெல்லாம் குறைக்க எண்ணி, நடையாய்நடந்து கனங்கொண்ட மணப்பெண்களைத் தேடி எடுக்கின்றனர். இத்தகையவர்களைப் பார்த்து கிராம மக்கள் உழுகிற மாடென்றால் உள்ளூரிலே விலைப்படாதா?'' என்று கிண்டலாகக் கதை அளப்பர்.

''கல்யாணம் ஆயிரங்காலப் பயிர்'' அதை அவரவர் நிச்சயித்துக்கொள்வதில் தப்புண்டென நான் கருதவில்லை. மணப்பொருத்தம் இருந்தால் மற்றப் பொருத்தம் வேண்டுமா?'' என்ற பழமொழியை மட்டும் எடுத்து நோக்குவது சாலப் பொருத்தமாகும்.

இன்று இலங்கை வாழ் தமிழர் அநேகர் உள்ளூரை விட்டு அயலூருக்குப் பறந்து கொண்டிருக்கும் காலமிது. ஏன் பறக்கின்றார்கள்? உள்ளூரில் உள்ள இக்கட்டான கால கட்டத்திலிருந்து தம்மையும் தமது சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்ள உயர்கல்வி பெற, தொழில்வாய்ப்புப்பெற எம் தமிழ் இனத்துக்குள்ள இக்கட்டுக்களை நீக்கி ஆக்கபூர்வமான நிரந்திரமான சுதந்திர வெற்றி பெறத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள எனப் பலதிறப்பட்டவர்கள் அயலூர் செல்லுகின்றனர்.

''உள்ளூரிலே ஓணான் பிடிக்காதவன் அயலூரிலே உடும்பு பிடிப்பான் என்ற பழமொழியுடன் நான்கு வகுப்பினரையும் ஒப்பிட்டு நோக்கினால் அவரவர் தகுதியைக் காணமுடியும். சுதந்திரத்துக்காக தம்மை தயார்படுத்திக் கொள்ளுபவர்கள் உள்ளூரிலும் அயலூரிலும் மதிப்பிற்குரியவர்கள், தியாகிகள். இனமீட்பை இலட்சியமாகக் கொண்டவர்கள் என்பதை எவராலும் மறுக்கமுடியாது. எனவே அவர்கள் எம்மையும் தம்மையும் பாதுகாக்க அயலூர் சென்று வரவேண்டியது மிக அத்தியாவசியமான செயலாகும்.

உயர்கல்வி பெறச் செல்பவர்கள் இந்நாட்டில் உள்ள இனவொதுக்கல் கொள்கையல் தமது உயர்கல்வியைப் பெற வசதியற்று அயலூர் சென்று கல்வி கற்பவர்கள். அத்தகையவர்கள் கற்றபின் தாம் பிறந்த நாட்டை மறவாது, இங்கு வந்து வாழ்வமைத்தால் வரவேற்கப்பட வேண்டியவர்களே!

தொழில் வாய்ப்புக்காக அயலூர் பறப்பவர்களிற் சிலர் உள்ளூரிலேயேதொழில் செய்து அதிக வருமானம் பெற்று வந்தவர்கள். ஆனால் சிலர் உண்மையாகவே தொழில் வாய்ப்பற்று இருந்தவர்கள். பலர் வரட்டுக் கௌரவத்தால் உடல் வருத்தி ஊதியம்தேட மனமற்ற சோம்பேறிகள் எனப் பல திறப்படுவர். இத்தகையவர்கள் தான் இன்று தம் கையில் இருந்தனவற்றை விற்றுச் சுட்டு பற்றாக்குறைக்குக் கடன்காரர்களுமாகி அயலூரிலே வேலை தேடிச் சென்றிருக்கின்றனர். இவர்கள் அத்தனை பேரும் உள்ளூர் திரும்பிவரும் பொழுது பண வசதி படைத்தவர்களாக வருகின்றார்களா? என்பதுதான் கேள்வி!

வசதியுடன் சென்றவர்கள் மேலும் வசதிபடைத்தவர்களாகின்றனர். உள்ளதை விற்றுச் சுட்டவர்களும்கடன்காரர்களாகச் சென்றவர்களில் சிலரும் ஓரளவு நிம்மதியடைகின்றனர். ஆனால் சிலர் கைப்பொருள்களையும் இழந்து, போலி முகவர்களிடம் அகப்பட்டு திக்கற்றவர்களாகி நிற்கதிக்காளாகின்றனர். இத்தகைய நிலைமைக்கிலக்காகிய பல குடும்பங்கள் நம் மத்தியில் பரிதவிப்பதை நாம் கண்ணாரக் காண்கின்றோம். இத்தகையவர்கட்கு ''ஏமாந்தவன் ஏமாந்து கெட்டான்' ஏமாற்றியவன் இடி விழுந்து கெட்டான்'' என்ற பழமொழியைத்தான் இங்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது.

பெரிய மட்டத்தில் தம்மைத் தான் காப்பாற்றிக்கொள்ள அயலூர் செல்பவர்களைப்பற்றி அதிகம் எழுத வேண்டியதில்லை ''ஆல் பழுத்தால் அங்கே, அரசு பழுத்தால் இங்கே'' என்ற பழமொழிதான் வெளவால் போன்ற இவர்கட்கு பதில் பகரும்.

''இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை'' மாடு புல் நிலத்தை கண்டவுடன் தன் பசி அடங்கும்வரை மேய்கிறது. பின் ஆறுதலாகக் கிடந்து இரை மீட்டு உணவையரைத்து ஜீரணத்துக்கு ஏற்றதாக்கிக் கொள்ளுகின்றது. இப்படியான மாடு தான் மேய்ந்து நிற்கும் பொழுது தூரத்தில் உள்ள அடிக்கட்டைப் புல்லின் பச்சை கண்டு, ஓடிச்சென்று ஏமாற்றமடைகிறது. பசியால் முன் மேய்ந்த புல் நிலத்தைத் தேடி வரவேண்டிய நிலைமைக்கு ஆளாகின்றது. இந்த மாட்டைப் போன்றுதான் சொந்த மண்ணைவிட்டு அயலூர்தான் தஞ்சமென எண்ணிச் செல்பவர்கள், என்றோ ஒரு நாள் உள்ளூர் சொந்தமண்ணை நாடி ஓடி வரவேண்டிய நிற்கதிக்கு ஆளாவார்கள் என்பது மட்டும் திண்ணம்.

## எங்கள் தோட்டம்

கத்தரி தக்காளி
மிளகாய்
காய்த்துக்குலுங்குதே
அழகாய்
சத்துள்ள உணவாகும்
வெண்டி
சாப்பிடுவோம் கீரை
சுண்டி

பந்தலில் தொங்கியே
ஆடும்
பாகற்காயோடு
புடோலும்
சந்தையில் விற்றது
போக
சாப்பிடுவோம் களிப்பாக!

பற்றியே கொம்பினில்
தாவி
பயறும் அவரையும்
ஏறும்
முற்றுமுன்னே அவை
பறித்து
முறித்துக் கறி
சமைப்போமே

வேலியில் படருதே
பீர்க்கு
வீட்டின் மேல் பூசினி
காய்க்கும்
வாளிப்பாய் வளருதே
இங்கு
வத்தாளை மரவள்ளிக்
கிழங்கு

பி. ஏ.
அந்தோனிப்பிள்ளை

## மயிர்க்கறிக்குள் ரெண்டொரு கீரை!

ஆனை யிறவில் அரைவிலைமுக் கால்விலையில்
பான மிருக்காம் பயணியர்க்கு!— ''தேன்பூசி
கழுத்தறுத்தல்!'' 'கேமெம்மெஸ்' கற்றுக் கொடுத்ததிது
உழுத்தவொரு மேற்கின்போர் உத்தி;

ரணதுங்காச் சிமாட்டி 'ரீ' போட்டுத் தந்துவிட்டால்
தணியுமா 'ஈழம்' என்ற தாகம்! —இனவெறியார்
தளபதியின் பெண்சாதி தன்னைவிளம் பரம் செயவே!
இளகினு ரகதிகள்பா லிங்கு.

செயில்ரன் ரணராசா, 'காலித்தகா' போன்றோர்
மயிர்க்கறிக்குள் ரெண்டொரு கீரை!—உரைக்கிலிவர்
'விகர்னன்'போல் தானிருப்பார் 'விபீஷணன்'போல்—
நீதிக்காய்
தகரா ரின உறவைத் தாம்.

—அல்லை. க. வ. ஆறுமுகம்

# உழிஞைப் போர்முறைகள்

சிவயோகமலர் ஜெயக்குமார்

போர் செய்வதற்கு இயலாது மனமுடைந்து திரும்பும் அரசனை மாற்று வேந்தன் பின்தொடர்ந்து அவ்வரணைத் தனதாக்கிக் கொண்டு, அவனைப் புகலும் போக்குமில்லாதபடி செய்து அவ்வரணை முற்றுகையிடுவதற்காக உழிஞைப் பூவையேனும், உழிஞைப் பூமாலையேனும் சூடிப் போர் மேற்செல்லுதல் உழிஞை ஒழுக்கமாகும் இவ்வொழுக்கம் இருபத்தொன்பது துறைகளாக வகுக்கப்படுகிறது.

"உழிஞை யோங்கிய குடை நாட்கோளே
வாணுட்கோளே முரசவுழிஞை
கொற்றவுழிஞையோடரச வுழிஞை
கந்தழி யென்று முற்றுழிஞையே
காந்தள் புறத்திறை யாரெயிலுழிஞை
அருந்தோலுழிஞை குற்றுழிஞையொடு
கோட்புறத்துமிஞை பாசி நிலையே
ஏணி நிலையே யிலங்கெயிற் பாசி
முதுவுழிஞையே முந்தகத் துழிஞை
முற்று முதிர்வே யானைக்கைக்கோளே
வேற்றுப் படைவரவே யுழுதுவித்திடுதல்
வாண் மண்ணு நிலையே மண்ணு மங்கலமே
மகட்பாலிகவே திறைகொண்டு பெயர்தல்
அடிப்படவிருத்த தொகை நிலை யுளப்பட இழுமென் சீர்த்தி இருபத்தொன்பதும்
உழிஞை யென்மனு ருணர்ந்திசினோரே"

வேந்தன் போர்செய்வதற்கு முன் நல்ல நாளிலே தனது குடையை அனுப்புதல் குடை நாட்கோள் எனவழங்கப்படும் அவ்வண்ணம் வாளை அனுப்புதல் வாணுட்கோள் ஆகும்.

இப்படியாகக் குடை, வாள் இவற்றை அனுப்பிய அரசன் தனது வீரமுரசுக்குப் பூசை செய்து அம்முரசை முழக்கிப் படைகளுடன் ஊக்கம், சூழ்ச்சி வன்மை இவற்றுடன் போருக்குப் புறப்படுதல் முரசவுழிஞை என்னும் துறையாகும்! போருக்குப் புறப்படும் அரசனுக்கு ஊக்கம் உண்டாகும் பொருட்டு திருமால் சோவென்ற மதிலையும், சிவன் முப்புரங்களையும் அழித்த செயல்களைக் கூறுவர். சூரனை வெல்லக் கருதிய முருகன் காந்தள் என்ற பூச்சூடிச் சென்றதைக் கூறி அரசனது வெற்றியைச் சிறப்பிப்பர்.

திருமால் சோவென்ற மதிலை அழித்தது காந்தழியென்றும், சிவன் முப்புரமெரித்தது முற்றுழிஞை என்றும், காந்தள் மலர் சூடிப் போருக்குச் சென்ற முருகனின் வெற்றியைக் கூறுவது காந்தள் என்றும் புறப்பொருள் வெண்பாக் கூறுகிறது.

கொற்றவுழிஞை என்பது அரசன் பகைவரின் காவற்பதியைக் கைக் கொள்ளக் கருதி தனது சேனைகளுடன் போருக்குச் செல்லுதல் ஆகும் இப்படியாக அரசன் செல்லும் போது மதிலைக் காவல் செய்யும் மறவன் தன் வீரத்தையும் அதனாலான கீர்த்தியையும்கூறுதல் அரசவுழிஞை ஆகும். புறத்திறை என்னும் துறையானது அரசன் தன் படைகளுடன் பகையரசனின் மதிலின சுற்றுப் புறத்தில் பாடிவீடமைத்துத் தங்குதல்ஆகும் மதிலின் வலிமையைச் சில மறவர் புகழ்ந்து கூறுவர். இது ஆரெயிலுழிஞை எனப்படும்.

அரசன் வெற்றிக்குரிய இசையை உண்டாக்கும்படியும், தாம் அதற்கான ஆயத்தங்களுடனே இருப்பதாயும் பகையரசன் அறிவதற்காகத் தங்கள் கேடகப் படையைச் சிறப்பாகக் கூறிக்கொண்டு போருக்கு எழுவர். கேடயப் படையைச் சிறப்பித்துக் கூறுதல் தோலுழிஞை என்னும் துறையாகும். குற்றுழிஞை என்பது யானையால் மதிற்கதவைப் பிளந்து மதிலைக் கைப்பற்றிக் காவலரண்களைக் கடந்து உள்ளே புகுந்து, கேடகத்தை உடையவர்கள் ஆடிக் கொண்டு ஆரவாரத்துடன் செல்லுதல் ஆகும். இவ்வாறு சென்ற மறவர் காவற் காட்டைக் கடந்து ஆழ்ந்த அகழியின் புறத்தில் தங்குதல் புறத்துழிஞை எனப்படும்.

பின் அகழி வழியால்நாவாய், தோணி முதலியவற்றில் ஏறிப் பகைவருடன் உழிஞை மறவர் போர் புரிவர். இத்துறை பாசிநிலை எனப்படும். பினமதிலின் வெளியே நின்ற வீரர்கள் கற்பொறி, விற்பொறி, கவண், தீயுமிழ் கருவி, செம்புருக்குமிடா, நூற்றுவரைக் கொல்லி, தள்ளி வெட்டி முதலிய மதிற் பொறிகள் தம்மை எவ்விதம் வருத்தினாலும் அஞ்சாது அம்மதில்மேல்ஏணியைச் சாத்துதல் ஏணிநிலை எனப்படும். சாத்திய ஏணியால்ஏறிச் செல்லுதல் எயிற் பாசியாகும்.

ஏணியல் ஏறிச் செல்லும் மறவர் காவற் காட்டினிற் குதித்து அங்கிருப்பவர்கள் எம்மாத்தரம் என வியப்படைவர். இத்துறை முதுவுழிஞை என்னும் துறையாகும். இவ்வுழிஞை மறவர் அம்மதிலினுள் இருக்கும் பகை மறவருடன் போர் செய்து வெல்வர். இது அகத்துழிஞையாகும். மாலைக் காலமானதும் காலையில் வருவோர் என அரசன் கூறிவிட்டு தன் பாடி வீடு செல்லுவான். அடுத்த நாட் காலையில் பகையரசனுடைய மதிலினுள் இருப்பவர்கள் வீர முரசம் முழக்குவர். இச்சத்தம் கேட்ட உழிஞை மறவர் கோபம் பொங்கி எழுதலை முற்று முதிர்வு என்பர், பின் உழிஞைமறவர் மதிலைஅழித்து அங்குள்ள யானைகளைக் கைக்கொள்வர் இதை நொச்சியரசனின் நண்பராகிய அரசன் அறிந்தால் உழிஞையாரை எதிர்க்க வருவான் இது வேற்றுப் படைவரவு என்ற துறையாகச் சொல்லப்படுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# தாய்

வித்தாய் மடியில் வைத்தாய்; மாதம்
பத்தாய்ச் சுமந்தெனைப் பெற்றெடுத்தாய்!
முத்தாய் முல்லைக் கொத்தாய்க் கொஞ்சி
மொய்த்தாய், நல்ல பேர் கொடுத்தாய்!
சத்தாய் உணவைச் சமைத்தாய்; பிள்ளை
சமர்த்தாய் உண்ணச் செய்வித்தாய்!
பித்தாய்க் கிடந்து பெரிதாய் அன்பைப்
பெய்தாய்; நீதான் தெய்வத்தாய்!

குழந்தாய்! என்றே அழைத்தாய்; உள்ளங்
குளிர்ந்தாய் எனை நீ அரவணைத்தாய்!
குழைந்தாய்; பாசம் பொழிந்தாய்த்தேனில்
குழைத்தாய் சொல்லை நீ மொழிந்தாய்!
விளைந்தாய் மலராய் விரிந்தாய் மணமாய்
விடிந்தாய் எந்தன் பகற்பொழுதாய்!
விழிந்தாய் புனலாய் வளர்ந்தாய் பயிரை
வாழ்ந்தாய் எனக்கென நாள் முழுதாய்!

நனைந்தாய் மழையில் காய்ந்தாய் வெயிலில்
நடந்தாய்; குடும்பத் தேரிழுத்தாய்!
முனைந்தாய் பணியில் சலித்தாயில்லை;
துணிந்தாய் எதற்கும் தோள் கொடுத்தாய்!
தனதாய் எதையும் நினைத்தாயில்லை;
எனதாய் எண்ணி நீ சேமித்தாய்
சினந்தாயில்லை; செய்பிழை பொறுத்தாய்
சிரித்தாய்; நீ தான் பூமித்தாய்!

மருந்தாய் நோயில் விருந்தாய்ப் பசியில்
இருந்தாய்; நீயெனை வாழ்வித்தாய்!
மறந்தாய் உன்னை; நினைந்தாய் என்னை
அருந்தாய்ப் பண்பை அறிவித்தாய்!
வருந்தாய் நாளும் மெலிந்தாய் மேனி
உழைந்தாய்; இரவில் துயில் நீத்தாய்!
புரிந்தாய் வினைகள் முடித்தாய் கடனை;
படுத்தாய்; ஓர் நாள உயிர்நீத்தாய்!

மறைந்தாய் மண்ணில் மடிந்தாய் எனினும்
நிறைந்தாய்; நெஞ்சில நீ நிலைத்தாய்!
பிரிந்தாய் விண்ணில் பறந்தாய் எனினும்
படிந்தாய் கண்ணில் நீர் முத்தாய்!
இறந்தால் நானும் பிறந்தால் மீண்டும்
இடந்தா! உந்தன் மடிமேலே!
இருந்தால் உந்தன் மகனாய் இருக்கும்
வரந்தான் வேண்டும் புவிமேலே!

— கவிஞர் வாலி
தருபவர்-கணேஷ்

## தடைகள்

7ஆம் பக்கத் தொடர்ச்சி

தாங்கோ... இதுதான் இப்ப என்னட்ட இருக்கிறது..."

—இருபது ரூபா நோட்டொன்றை எடுத்து நீட்டுகிறார்..

அவர்கள் போய் விட்டார்கள்...!

★

எத்தனை லட்சம் மக்கள்... இந்த ஊர்வலத்தில் போகிறார்கள்? பொம்பரும், ஹெலியும் மாறி, மாறி மனித வேட்டையாடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில்... இத்தனை மக்களா...?

கடல் வந்து நகரத்துக்குள் நுழைந்துவிட்டதா?

இத்தனைகாலமும் படலையைத்தாண்டுவதற்கு அப்புவின் அனுமதிக்காக, பூனையைப்போல் பதுங்கி நின்ற நான், "தமிழீழத்தை அமைப்பதற்காக ஓரணியில் சேருங்கள்" என்று அந்தப் போராளி இயக்கத் தலைவர் விடுத்த வேண்டுகோளை அடுத்து, வேகும் வெய்யிலில் உரிமைக் குரல் எழுப்பியவாறு செங்கொடிகளை ஏந்திச் சென்று கொண்டிருக்கும் கூட்டத்தில் ஒருவனாகச் சேர்ந்து துணிவுடன் நடக்கிறேன்...

இதயம் விடுதலைக் கீதத்தை இசைக்க... கைகள் புரட்சிக் கொடியைத் தாங்கிச் செல்கின்றன... ஆம், நான் படலையைத் தாண்டிவிட்டேன்.

அப்புவால் இனி என்னை ஒன்றுமே செய்ய முடியாது.

# முரசொலி
## குறுக்கெழுத்துப் போட்டி
### பரிசு: ரூபா 100

இலக்கம்: 12

முடிவு திகதி: 3. 6. 1987

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 | 3 தா | | ம் | 4 வெ | | ளி |
| 5 | தா | | ரி | 6 ச | | 7 | 8 ம |
| 9 த | 10 க | | ம் | 11 | ளி | 12 க | |
| 13 | | ம் | ■ | 14 உ | 15 | 16 தி | |
| ன் | ம் | ■ | 17 நி | | வ | | ய |
| 18 சோ | | ன | | 19 த | | 20 க | ம் |
| 21 | ம் | 22 பி | 23 ம | | 24 பா | | 25 தி |
| னி | 26 தி | | 27 | வ | | ம் | |

பெயர்: ..........................................

வயது: ..........................................

முகவரி: ..........................................

**இடமிருந்து வலம்**

1. இணக்கம், சகோத்தி.
4. வெருட்சி அடைய செய்வது.
5. விருத்த கங்கை- இந்திய நதிகளில் ஒன்று.
6. துரியோதனன், மாமன், நிமித்தம் பார்ப்போன்.
9. இரும்பின் மேல் பூசும் ஒரு உலோகம், மெல்லிய தகடு.
11. கிள்ளை.
12. ஆடு, எருமை இவற்றில் ஆண், விஞ.
13. தேர்.
14. ஆற்றல், நன்மை, நிச்சயம், கல்வி.
17. நவக்கிரி- புத்தூரிலுள்ள ஆழமான கிணறு.
18. சுபம், நன்மை.
19. வாவி, குளம்.
21. இளையவன், சகோதரன்
23. வேதம், ஒளித்தல்.
24. 'ஓடிவிளையாடு பாப்பா' பாட்டை இயற்றியவர்.
26 வரி.
27. நீர்த்துளி.

**மேலிருந்து கீழ்**

1. உடன் பிறந்தவன்.
2. தாய், அன்னை.
3. பயிர்.
4. கோபம்.
6 மனைவி, தோழி.
7. ப்ழம் தலைகீழாய் உள்ளது.
8. மடம்.
10. பலதும்சேர்ந்தது, மாலை
14. சுற்றிவருதல்.
15. பொரி, உலர்த்து தடுமாறியுள்ளது.
16. மறைப்பு.
18. பரீட்சை.
19. பூமி, வயல்.
20. கை.
22. சந்திரன், நிலவு.
23. புத்தி.
24. மரம், ஐவகை நிலங்களுள் ஒனறு.
25. மூன்று, உலாவு.

## போட்டி விதிகள்

1. இப் போட்டியில் முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தில் கடமைபுரிபவர்கள், அவர்களின் குடும்ப உறவினர்கள் தவிர்ந்த மற்றைய அனைவரும் பங்குபற்றலாம்.
2. பத்திரிகைய்ல் வெளியாகும் கூப்பனை மட்டுமே பயன் படுத்தவேண்டும். பெயர், முகவரியை விளக்கமாக எழுதவும்.
3. முற்றிலும் சரியாக நிரப்பப்பட்ட கூப்பனுக்கே பரிசு வழங்கப்படும். சரியான விடையை பலர் அனுப்பினுல் பரிசுக்குரியவர் லொத்தர்மூலம்தெரிவுசெய்யப்படுவார்.
4 இப் போட்டி சம்பந்தமான கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. கூப்பன் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல : '12' என்று தவருது குறிப்பிடவும்.
6. பிரதம ஆசிரியரின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பிரதம ஆசிரியர்,
முரசொலி/வாரமுரசொலி,
ஆர். ஜி. பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

சுத்திரச் சிறுவிளம்பரம்

## சேவை

பிடவைகள், அன்பளிப்புப் பொருட்கள், பாம் முட்டைகள் இவ் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம். சீமாட்டி சுமங்கலி, 531, பலாலி வீதி, திருநெல்வேலி. 05046

## ஏல விற்பனை

இன்று காலையிலிருந்து கடைத்தளபாடங்கள் வீட்டுத் தளபாடங்கள், லெதர் சாமான்கள், ஸ்ரேசனறிச் சாமான்கள், பலவித புத்தகங்கள், லவ்பேர்ட்ஸ், முயல்கள் ஆடுகள், வலம்புரிச்சங்கு, சப்பாத்துகள், படங்கள், இன்னும் ஏராளமானவைகள். லக்கிபெனிபிட்கோ, லிமிட்டட் பொதுச்சந்தை, கோப்பாய். 05102

## இடமாற்றம்

### ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

எமது பிடவை ஸ்தாபனம்
தற்போதைய சூழ்நிலை காரணமாக

இல. 424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

[பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் முன்பாக,
வீடியோ பிரசாத்திற்கு அருகாக]

என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது
என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றோம்.

05058

## பிரயாணத்திற்கு தயாராகுங்கள்

★ London

★ Norway ★ Germany

★ France ★ Canada

QATAR ( Open Visa)

1. Labourers - 450 Q.R
2. Carpenters - 700 Q.R
3. Masons - 700 Q.R
4. Painters - 750 Q.R

நோர்வே செல்வதற்கு துரித கதியில் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

SINGAPORE

1. Labourers (Building Construction & Shipyard)
2. House Maids

### GLORIA TRAVELS

சின்னத்தம்பி அவெனியூ - மானிப்பாய்

எமக்கு வேறு கிளைகள் கிடையாது.

05026

## புத்தகம்

Balaji's Book of Letter writing Rs. 65/65, Idioms Rs. 22/75, Essays Rs. 29/75, Electrical Guide Theory and Practice Rs. 73/50, ரேப் ரிகார்டர் Rs. 34/15, சினிமா ஆப்ரேட்டர் பயிற்சியும் புரொஜக்டர் மெக்கானிசமும் Rs.65/65. விற்பனையாளர்கள் -பூபாலசிங்கம் புத்தகசாலை புத்தக களஞ்சியம், யாழ்ப்பாணம். 05005

## TRAINING

Computer Programming Course புதிய பிரிவுகள் IDP யின் தலைமையகத்தால் 25 . 5 . 87 காலை 9 மணிக்கு குளப்பிட்டி சந்தியிலும் - தெல்லிப்பழையிலும் - நெல்லியடியிலும் ஆரம்பமாகின்றன. 05071

## சிறுவர்க்கான

4ஆம் பக்கத் தொடர்ச்சி

ஈழத்தில் இத்துறையிற் சிறிதளவு முயற்சி நடைபெறாமல் இல்லை. குழந்தை. ம.சண்முகலிங்கம் இத்துறையில் அதிகம் செய்துள்ளார். அவரே இத்துறையில் இங்குமுன்னோடியாகவுமுள்ளார். இவரது முதல் சிறுவர் நாடகம் ''கூடிவிளையாடு பாப்பா'' பெரியவர்கள் சிறியவர்கட்காக நடித்த நாடகமாகும்.

இன்று எம் குழந்தைகளின் உளவிருத்திபற்றிப்பரவலாகப் பேசப்படுகின்றது. அவர்களை ஆரோக்கியமும் ஆளுமையும் மிக்க சந்ததியினராக உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் பல்வேறு மட்டங்களிலும் அரும்பத் தொடங்கியுள்ளது. குழந்தைகளுக்கு,பொழுதுகளை மகிழ்ச்சியாகக் கழிக்கவும் அதனூடு பல விடயங்களை அறிந்து கொள்ளவும் தக்கவான சில முயற்சிகள் நடைபெறுகின்றன இளம் சந்ததியினரை யந்திரங்களாக்குகின்ற, பணமீட்டு போட்டியில் முதலிடங்களைப் பெற்றுத் தரக்கூடிய கல்வி முறைபற்றி இன்று இளைஞரிடையே தோன்றியுள்ள விமர்சனம் நமது குழந்தை பால் இளந்தலைமுறை கொண்ட அக்கறையின் வெளிப்பாடே. சிறுவர் நாடகம் பாடசாலைகளிற் பரவலாக்கப் படுதல் இன்று அவசியமாகும்.பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இதிற் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும்

## குறுக்கெழுத்துப் போட்டி

### இலக்கம் 11

முடிவுகள் நாளை வெளிவரும்

## லலித்தின்

3ஆம் பக்கத் தொடர்ச்சி

மாகப் பயன்படுத்தி யாழ். வைத்தியசாலையில் புகுந்து முகாம் அமைப்பதே ராணுவத்தின் இரண்டாவது நோக்கம் என்பது தெளிவாகிறது.

இதனை உணர்ந்த விடுதலைப் புலிகள் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமென்ற முக்கிய கோரிக்கையை முன்வைத்தார்கள்.

இதேவேளையில் சமாதான வலய பேச்சுக்களுக்காக யாழ். வந்திருந்த கப்டன் கொத்தலாவலை திங்கட்கிழமை மாலை புலிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்த அதே வேளையில் யாழ்நகரில் இரண்டு பொம்பர்களும், இரண்டு ஹெலிகளும் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு பல பொதுமக்களைக் கொலை செய்தன. அரசாங்கத்துடன் நேரடியாக பேசுவதில் எவ்வித பயனும் இல்லை என்பதை இது மேலும் உணர்த்திவிட்டது.

எனினும் புலிகளின் நிபந்தனையை நிராகரித்த அமைச்சர் லலித் சர்வதேச நிறுவனங்கள் எதுவும் இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்து விட்டார். சமாதான வலயப் பிரகடனத்தை உண்மையிலேயே நீதியான முறையில் கடைப்பிடிக்க அமைச்சர் தயாராக இருந்திருந்தால் புலிகளின் நிபந்தனையை அவர் ஏற்றுக்கொண்டிருக்கலாம். இந்த வகையில் அமைச்சரின் திட்டங்களை புலிகளின் நிபந்தனை தோல்வியடையச் செய்துவிட்டதென்றே தோன்றுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஹெலியிலிருந்து யாழ்ப்பாணத்தில் போடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் அரசின் இத்திட்டத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

## உழிஞைப்

10ஆம் பக்கத் தொடர்ச்சி

அதையும் வென்ற உழிஞையார் தாம் வெற்றி பெற்ற அறிகுறியாகப் பகைவருடைய கழுதையாகிய ஏரைவிட்டு உழுவான். அதில் கவடியையும், குடைவேலையும் விதைப்பான். இத்துறை உழுதுவித்திடுதலாகும்.

வான் மண்ணுநிலையென்பது வெற்றியீட்டியவானைத் தீர்த்த நீரால் மஞ்சனமாட்டுதலாகும். உழிஞை மன்னன் வெற்றி கொண்டமையைப் புகழ்ந்து கூறிப் பின் நொச்சி மன்னனின் மகளை விரும்பிப் போர் செய்தலும் உண்டு. இத்துறை மகட்பாலிகல் எனப்படும்.

தோல்வியுற்ற அரசன் வெற்றிகண்ட உழிஞை அரசனைப் பணிந்து திறை செலுத்துதல் திறைகொண்டு பெயர்தல் எனப்படும். பகையரசர் திறை செலுத்தியபோதும் வெற்றியீட்டிய அரசர் நீண்டகாலம் அங்கேயே இருத்தலை அடிபடலிருத்தல் ஆகும். பல அரணகளில் உள்ளஅரசர்கள் வெற்றியரசனின்முன், தம்வலி இழந்து தாழ்ந்து நிற்பர். இத்துறை தொகை நிலையாகும். இவ்விருபத்தொன்பதுடனும் உழிஞை ஒழுக்கமும் அதன் போர்முறைகளும் முற்றுப்பெறுகின்றன.

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றிநவிலலும்



### திருமதி யோகலட்சுமி பாலசுப்பிரமணியம்

[ஆசிரியை யாழ். நல்லூர் ஸ்ரேஷன் சி. சி. த, க. பாடசாலை]

தோற்றம்; 21 - 04 - 1946 மறைவு: 24 - 04 - 1987

24-04-1987 இல் நடைபெற்ற எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல்வழிகளிலும் உதவிய அனைவருக்கும்உளமார்ந்த நன்றிகளைத்தெரிவிக்கின்றோம்.

இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் கிரியைகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''பாலமனை'' பிள்ளைகளும் குடும்பத்தினரும்
வேலணை மேற்கு.
வேலணை - 6.

05104

## பிரயாண ஒழுங்குகள்

★ நோர்வே ★ ஜேர்மனி

★ லண்டன் (U. K.)

நோர்வே:- 25-5-87 காலை எமது நோர்வேகுழு புறப்படுகின்றது. அடுத்த நோர்வே குழு 5-6-87 புறப்படவுள்ளது. எனவே ஆண், பெண் இருபாலாரும் உடன் எமது காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

ஜேர்மனி:- ஜேர்மனிக்கு கொழும்பிலிருந்து நேரடி பிரயாணம் செய்யலாம் என்பதை அறியத் தருகின்றோம். அத்துடன் ஆண், பெண் இருபாலாரும் செல்லலாம். எனவே செல்ல விரும்புபவர்கள் எமது காரியாலயத்துடன் நேரடித் தொடர்புகொள்ளவும்.

லண்டன்:- லண்டனுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம் செய்யலாம் என்பதை அறியத்தருகின்றோம். அத்துடன் ஆண், பெண் இருபாலாரும் செல்லலாம். எனவே செல்ல விரும்புவோர்கள் எமது காரியாலயத்துடன் நேரடிதொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியா.- சவூதி அரேபியாவுக்கு பாஸ்போர்ட் கொடுத்த அனைவர்களினதும் ஒழுங்குகள் செய்யப்பட்டுவிட்டன. போக்குவரத்து சீரற்ற நிலைமையினால் தடங்கல் ஏற்பட்டுள்ளது. எனவே 5-ம் திகதி எமது காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

ஒமேகா ரவல்ஸ் அன் ருர்ஸ்
N.பாலா
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

கிளை
ஒமேகா ரவல்ஸ் அன் ருர்ஸ்
குப்பிளான் சந்திக்கருகாமை
குப்பிளான்.
(பஸ் இல. 764, பலாலி ரோட்)

தீவுப்பகுதி மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

5 ஆம் திகதி வரைக்கும் எமது தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும். 6ஆம் திகதிக்கு பிறகு எமது காரியாலயம் திறக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

05103

REGISTERED AS A NEWSPAPER

For Quality Video Filming
VIDEO Vihons
353C, Clock Tower Road.
Wellington Junction.

வார முரசொலி
VARAMURASOLI

சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்திட
வீடியோ ஷிஹொன்ஸ்
353C, மணிக்கூட்டு வீதி
வெலிங்டன் சந்தி

### ★ கைதுசெய்தவர்கள் கைவிரிக்கின்றனர்

# கிழக்கில் கைதான 650 தமிழரையும் காணவில்லையாம்!

கிழக்குமாகாணத்தில் விசேட பயிற்சிபெற்ற அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்ட சுமார் 650 பேர் காணமற்போயுள்ளதாக 'ராய்ட்டர்' தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு பிரஜைகள் குழுவை ஆதாரங்காட்டி 'ராய்ட்டர்' தெரிவிக்கையில் இவ்வாறு காணமற்போனவர்கள் பதினொரு வயதிற்கும் 55 வயதுக்கும் இடைப்பட்டவர்களே எனவும் தெரிவித்துள்ளது.

மேற்படி ஒவ்வொருவரைப் பற்றியும் அதிகாரிகளிடம் கேட்டபோது, அவர்கள் தம்மிடம் இல்லை எனவும்; அவர்களைப்பற்றிய விபரங்கள் எதுவும் தெரியாதெனவும் அதிகாரிகள் கைவிரித்துவிட்டார்களாம்.

காணமற் போகும் குற்றச்சாட்டை தான் முற்றாகமறுக்கவில்லையெனவும், எனினும் மேற்படி பிரஜைகள்குழுவின நோக்கத்தை தான் சந்தேகிப்பதாகவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி 'ராய்ட்டர்' நிருபரிடம் தெரிவித்தார்.

### அமைச்சர் அத்துலத் முதலி அறிவிப்பு:

## வருங்கால பயங்கரவாத கொலைகளுக்கு தமிழக அரசே பொறுப்பேற்கவேண்டும்

தமிழ்நாடு அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கும், ஈரோசுக்கும் வழங்கியுள்ள நிதியுதவி ஆயுதங்கள் வாங்குவதற்காகவே பயன்படுத்தப்படுமென்பது நிச்சயம். இதன் மூலம் எதிர்காலத்தில் பயங்கரவாதிகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது அதிகரிக்கும். இவ்வாறான கொலைகள் இனிமேல் நடக்குமானால் அதற்குத் தமிழக அரசே காரணமென்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் எடுத்து வரும் சமாதானத் தீர்வு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வரும் இரண்டு தீவிரவாத இயக்கங்களுக்கும் நிதியுதவி வழங்கியதன் மூலம் இந்திய மத்திய அரசுக்கு எதிராக தமிழக அரசு செயற்படுவது தெரிகின்றது எனவும் அமைச்சர் சொன்னார்.

இரண்டு நட்பு நாடுகளுக்கிடையே நெருக்கடி ஏற்படக்கூடிய விதத்தில் தமிழக அரசு நடந்து கொண்டுள்ளது என்றும், தமிழகம் என்றுமே பயங்கரவாதத்தை வளர்ப்பதில் முன்னணியில் நிற்பதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

முரசொலி
வெற்றிக்கேடய
கிரிக்கெட்
போட்டி
புகைப்படங்கள்
நாளைய
முரசொலியில்
வெளிவரும்

பிரயாண ஒழுங்கு

மாலைதீவு: மேசன், காப்பென்றர், பைப்பிற்றர், லேபர், ஒரு வாரத்தில் பிரயாணம். உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி:
1. கிளீனர், சாரதிகள், சுப்பவைசர், மிகக் குறைந்த சலுகைக் கட்டணம். நோன்பு முடிந்த முதல் வாரம் பிரயாணம்.
2. Open Visa ஆண், பெண் ஆஸ்பத்திரி கிளினேஸ் கவர்ச்சியான வேதனம். உடன் பிரயாணம். விரைவில் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூர்: பணிப்பெண்கள் உடன் தேவை.

விபரங்களுக்கு:
R. K பரமசாமி
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
வட்டுவினி பிள்ளையார் கோவிலடி,
இணுவில்.

05097

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 24-05-87 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### அமெரிக்க..

...மூக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தமது அடாவடித்தனங்களை ஆரம்பித்துள்ளார்கள். இந்தியக் கடல் எல்லைக்குள் புகுந்து இலங்கைக் கடற்படையினர் நேற்று முன் தினம் மேற்கொண்ட தாக்குதலொன்றில் இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்துள்ளார்கள்.

தஞ்சை மாவட்ட பட்டுக்கோட்டை அருகேயுள்ள சேதுபாலா சமுத்திர கடல் பகுதியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இங்கு கட்டுமரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். படுகாயமடைந்தவர்களில் மற்றொரு மீனவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

### பொம்பர்களின்...

...கள் நகரைப் பல தடவைகள் சுற்றி வட்டமிட்டன. பக்கவாட்டில் சரிந்தும், திடீரென மேலிருந்து கீழிறங்கியும் இந்த இரு பொம்பர்களும் வான விளையாட்டுக்கள் காட்டியதினால் மக்கள்மத்தியில் பெரும் கிலி ஏற்பட்டது. எனினும் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளாமலேயே பொம்பர்கள் சிறிது நேரத்தில் நகரை விட்டு அகன்றுசென்றன.

## காங்கேசன்துறை வட்டார பாடசாலைகள் இடமாற்றம்

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் கல்விப் பணிப்பாளர் ஜனாப்.எம்.எம்.மன்சூர் அவர்களால் கூட்டப்பட்ட அதிபர்கள் மகாநாட்டில் தற்போது காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பாடசாலைகள் பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகள் காரணமாகத் தொடர்ந்து இயங்க முடியாத நிலைபற்றி ஆராயப்பட்டது. பாடசாலைகளின் இடமாற்றம் குறித்து பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதன்படி, காங்கேசன்துறை மகாவித்தியாலயம் காங்கேசன்துறை விசாலாட்சி வித்தியாலயத்திலும், காங்கேசன்துறை றே. க. த. க. பாடசாலை மாவிட்டபுரம் வடக்கு அ. மி. த. க. பாடசாலையிலும், நடேஸ்வராக்கனிஷ்ட வித்தியாசாலை மாவிட்டபுரம் தெற்கு அ. மி. த. க. பாடசாலையிலும் வரணி கனிஷ்ட வித்தியாசாலை தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலைக்கு அருகில் உள்ள நூலகத்திலும், மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை சினன்கலட்டி ஞானோதய வித்தியாசாலையிலும், நடேஸ்வராக் கல்லூரி மகாஜனக் கல்லூரியிலும், தையிட்டி கணேச வித்தியாசாலை தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலையிலும் நாளை முதல் பகல் பாடசாலைகளாக இயங்கும்.

## தீவுப்பகுதி ஆஸ்பத்திரி கடற்படையால் சேதம்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை மாவட்ட ஆஸ்பத்திரி ஆண்கள் வார்ட், காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால் பலத்த சேதத்திற்குள்ளானது. ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் முன்கூட்டியே மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கையினால் 'வார்ட்'டிலிருந்த நோயாளர் உயிர் தப்பினர்.

கடந்த வாரம் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஊர்காவற்றுறைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதுடன் 'ஷெல்' தாக்குதல்களும்நடைபெற்றன.

### தளபதி ராதா...

...மாகியது.

காலை வண்ணார்பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற இறுதிக்கிரியைகளைத்தொடர்ந்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனமொன்றில் ஏற்றப்பட்டராதாவின் பூதவுடல் ஊர்வலமாக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆயுதந்தாங்கிய புலிகள் இயக்க கெரிலாக்கள் முன்பாகவும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு (ஸோல்ட்), மகளிர் அமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அதன் பின்பாகவும் செல்ல ராதாவின் பூதவுடலைத்தாங்கியவாகனம் பின்னால் சென்றது. நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இதனைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

கோம்பயன்மணல் மயானத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. இ. திலீபன், தளபதி ராதாவின் திறமைகளையும், சாதனைகளையும் எடுத்துக்கூறினார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தலைவர் முதல் சாதாரண போராளி வரை ஒருபோதுமே மரணத்தைக் கண்டு அஞ்சுவதில்லை எனவும் அவர்கள் மரணத்தைச் சந்திக்கத் தயாராகவே எப்போதும் யுத்தகளத்திற்குச் செல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

ராதாவின்மரணத்தைக்கண்டு நாம் அஞ்சவோ, கலங்கவோ வேண்டியதில்லை. அவரைப் போல ஆயிரக்கணக்கான போராளிகள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். அவரது இலட்சியத்தை ஈடேற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கடமையாகவிருக்கும் எனவும் திரு. திலீபன் கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரியில் தளபதி ராதா (ஹரிச்சந்திரா) வின் ஆசிரியராகவிருந்த திரு. மகேந்திரனும் இங்கு உரையாற்றினார். பெருந்தொகையானோர் மலர் வளையங்களைச் சாத்தி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்கள்.

### இலங்கை...

...டம் வரையில் பேசினார். கொழும்புத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் பேச்சுவார்த்தைகளின்போது உடனிருந்தார்.

இச் சந்திப்பின் போது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கடிதமொன்றையும் தூதுவர் திலகரத்தின இந்தியப் பிரதமரிடம் கையளித்தார். தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களிடம் தமிழக அரசு நிதி உதவியை வழங்கியிருப்பது தொடர்பாகவும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகவும் பிரதமர் காந்தியிடம் தூதுவர் திலகரத்தின எடுத்து விளக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பிரிட்டிஷ்...

...செய்து வருவதாகவும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெலிகப்டர்களைச் செலுத்த இலங்கையரைப் பயிற்றுவிக்கும் சுமார் 35 கே. எம். எஸ். படையினர் போர் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டை நடக்கும் பகுதிகளில் விமானம் பறக்கும்போது கே. எம். எஸ் நிறுவன வீரரே துணை விமானியாக இருப்பார். ஆனால் பிரதம விமானியாக இலங்கையர் இருப்பார், எனவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரேமதாஸாவின்...

...இந்தியாவின் இக் கண்டனத்தையும் கவலையையும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று ஏற்பட்டுவரும் நிலைவரமும், இந்தியாவைப்பற்றி இலங்கை அரசின் பிரதமர் நாடாளுமன்றத்தில் மிகக் கடுமையாக விமர்சித்திருப்பதும் இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக இந்திய அரசு எடுத்து வரும் தீவிரமான நன்முயற்சிகளுக்கு உகந்ததாக இல்லை என இச்சந்திப்பில் அமைச்சர் ஹமீத்திடம் திரு. பூரி திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்.